www.padippakam.com

# சூரியக்கதிர்

## வென்றது யார்?
## வெல்லப்போவது யார்?

"உன்னை அறி; எதிரியை அறி - உனது
பலவீனங்களையும் எதிரியின்
பலவீனங்களையும் கண்டறி -
அதன் பின்பு - தோல்வி பற்றிய கவலையே
இன்றி நூறு சமர்களை நீ நடத்தலாம்."

தாய்நிலம் பதிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சூரியக்கதிர்

## வென்றது யார்?
## வெல்லப்போவது யார்?

தாய்நிலம் பதிப்பகம்

படிப்பகம்

## நுழைவாயிலில்...

இன்றைய காலகட்டத்துத் தமிழீழ விடுதலைப் போர் மரபு ரீதியான இராணுவக் கட்டமைப்புக்களைக் கொண்ட இரு இராணுவங்களுக் கிடையிலான ஒரு போர் அல்ல; மாறாக மரபு ரீதியான இராணுவக் கட்டமைப்புக்களையும், நவீன இராணுவத் தளபாடத்தினையும் பெரும் தொகையிலான ஆட்பலத்தினையும் கொண்ட சிறிலங்காவின் சிங்கள ஆயுதப் படையினருக்கும், கெரில்லாப்படைக்குரிய கட்டமைப்புக் களுடன் தோற்றம்பெற்று ஒரு அரைமரபு நிலை இராணுவமாக வளர்ந்துள்ள, ஒப்பீட்டளவில் ஆட்பலம் குறைந்த தமிழீழ தேசத்தின் தமிழர் படைக்கும் இடையிலான ஒரு போர்.

பெரும் எண்ணிக்கையிலான ஆள், ஆயுத பலமும், மட்டுப்படுத்தப்படாத படைக்கல சக்தியும் சிறிலங்காப் படையினரின் பலம் எனில், வீரமும், மதிநுட்பமும் அளப்பரிய தியாகத்திற்குத் தம்மை உட்படுத்தும் அர்ப் பணிப்பும் இணைந்த தாக்குதற்திறன் நிரம்பிய பல்வேறு படை யணிகளும், சிறந்த தலைமையும் தமிழர் படையின் பலம் எனலாம்.

ஒரு மரபு ரீதியான போர்முனையில் சிங்களப் படையணி சாதகமான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கும்வேளை, கரந்தடிப் போர் முனையில் தமிழர் படையணி சாதகமான நிலைமைகளைக் கொண்டிருக்கின்றது. இதனால் இவ்விரு படையணிகளுக்கும் இடையிலான சமரில் சமர் எப் பரிமாணத்தில் நடைபெறுகின்றது என்பதைப் பொறுத்தே எப்படையணி வெற்றிபெறும் என்பது தீர்மானிக்கப்படும்.

இங்கு ஒரு விடயத்தினை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். போர் அல்லது யுத்தம் என்பது வேறு, சமர் என்பது வேறு. தமது இலக் கினை அடைந்துகொள்வதற்கு, முரண்பட்ட இரு சக்திகளிடையே நடைபெறும் ஆயுதப் போராட்டத்தினை நாம் இங்கு போர் அல்லது யுத்தம் என வரையறுத்துக்கொள்வோம். இதன்படி, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபட்டு, தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையினை வென்றெடுத்தல் தமிழீழ தேசத்தின் இலக்காக இருக்க, தமிழீழ தேசத்தின் எதிர்ப்புச் சக்தி

www.padippakam.com



யினை முறியடித்து சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மேலாதிக்கத்தினை தமிழர் மீது திணித்துவிடுதல் சிங்கள தேசத்தின் இலக்காக இருக்கின்றது. இம் முரண்பட்ட இரு இலக்குகளுக்காக தமிழர் தேசமும் சிங்கள தேசமும் தமக்குள் மோதிக்கொள்கின்றன. போர் வெடிக்கின்றது.

இங்கு எவருடைய போர் முற்போக்கானது என அனுமானிப்பதற்கு போரின் இலக்கு குறித்த பார்வை முக்கியம். தமிழ் மக்களின் போர் விடுதலைக்கானது. சிங்கள தேசத்தின் போர் ஆக்கிரமிப்புக்கானது. இந்த வகையில் தமிழர் தேசத்தின் போரே நியாயமான போராக வரலாற்றில் நிலைபெறும்.

சமர் என்பது போரின் ஓர் அங்கம். ஒரு போர் பல சமர்களைக் கொண்டிருக்கும். இத்தகைய சமர்கள் எந்தப் பரிமாணத்தில் நடைபெறுகின்றது என்பதைப் பொறுத்து சமரின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும். இரு மரபு ரீதியான இராணுவங்களுக்கிடையேயான சமர் எனில் எந்த இராணுவம் ஆள், ஆயுத, படைக்கலச் சக்தியினைக் கூடுதலாகப் பயன்படுத்துகின்றதோ அந்த இராணுவம் வெற்றிவாய்ப்புக்களைக் கொண்டிருக்கும். குறைந்த ஆட்பலத்தினை உயர் தொழில்நுட்பங்கள் ஈடுசெய்வதுமுண்டு. ஒரு மரபுப் படை யணிக்கும் ஒரு மரபு சாராத படையணிக்கும் இடையிலான சமர் முழுமையான மரபுவழிச்சமராக நடைபெறின் மரபுப் படையணியே வெற்றிவாய்ப்புக்களைக் கொண்டிருக்கும்.

ஒரு சமரில் பெறும் வெற்றி போரின் வெற்றியாகிவிடாது. ஒரு போரினை வெல்ல பல சமர்களை வென்றாக வேண்டும். இதை இன்னொரு வகையில் சொல்வதானால் ஒரு சமரின் தோல்வி போரின் தோல்வியாகிவிடாது. இருப்பினும் ஒரு சமரில் ஒரு தரப்பு தனது போரிடும் ஆற்றலை இழந்து விடுமானால், அச் சமரின் தோல்வி போரின் போக்கைத் தீர்மானிப்பதில் பாரிய பங்கினை வகித்துவிடும்.

இப் பின்னணியில் வைத்தே சூரியக்கதிர்-1, சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கைகளை நோக்கவேண்டும். இவை தமிழீழ விடுதலைப்போரின் பாரிய இரு சமர்கள். போராட்ட வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சிங்களப் படையணி தனது வளங்கள் அனைத்தையும் ஒருங்குதிரட்டி நடாத்திய சமர்கள். சூரியக்கதிர்-1 வலிகாமச் சமராக வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சூரியக்கதிர்-2 இந் நுழைவாயில் பகுதியினை எழுதிக்கொண்டிருக்கும்போது தென்மராட்சிப்பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. வடமராட்சிப்பகுதியினை நோக்கி

www.padippakam.com



சமரினை விரிவுபடுத்தும் நோக்கம் சிங்களப்படையணிக்கு இருக்கின்றது. அதற்கான முயற்சியினையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. இருந்தும் இன்றுவரை சிங்களப்படையணியினை வடமராட்சியின் வாசலில் வைத்து தமிழர் படையணி தடுத்துவருகின்றது.

இச் சமர்கள் ஒரு முழுமையான மரபு சார்ந்த சமர்களாகப் பரிமாணம் கொண்டுள்ளன. அந்த மரபு சார்ந்த தன்மை சிங்களப்படையணிக்குச் சாதகமாக உள்ளது. தமிழர் படை யணிக்குப் பாதகமாக உள்ளது. தனக்குச் சாதகமான பரிமாணத்தில் சமரினை நடாத்தி, அச்சமருக்குத் தமிழர் படையணியினை இழுத்து, தமிழர் படையணியின் போரிடும் ஆற்றலை அழித்துவிடுவதன் ஊடாக, இச்சமர்களில் பெறும் வெற்றியுடன் போரின் போக்கினை மாற்றியமைத்துவிடலாம் எனச் சிங்களப் படையணி எண்ணியது. ஆனால் அது எதிர்பார்த்த மாதிரி நிகழ்வுகள் நடைபெறவில்லை.

தமிழர் படையணி, மரபு சார்ந்த போர்முனையில் தனது பலவீனங்களை நன்கு உணர்ந்திருந்தமையால் அதற்கேற்ற போர்த்தந்திரத்தினை வகுத்துக்கொண்டது. பிரதேசங்களை இழந்த போதிலும் தனது போரிடும் ஆற்றலை தமிழர் படையணி தக்கவைத்துக்கொண்டது. இன்னும் தெளிவாகக் கூறப்போயின், 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையூடாகத் தோன்றிய நிலைமைகளைப் பயன்படுத்தி தமிழர் படையணி தனது பலத்தினை மேலும் ஒரு படி அதிகரித்துள்ளது. சிங்களப்படையணியின் ஆக்கிரமிப்பில் இருந்து தப்பித்துக் கொள்ள மக்கள் எல்லாம் வெளியேறிவிட, பிரதேசங்களைக் கைப்பற்றியதைத்தவிர வேறு பயன்களை வலிகாமச் சமரின் வெற்றியாகச் சிங்களப்படையணி பெற்றுவிடமுடியவில்லை. இதனால் ஏற்பட்ட அவமானத்தினையும் தோல்வியினையும் ஓரளவுக்கேனும் ஈடுசெய்துவிடும் நோக்கம் சூரியக்கதிர்-2 இராணுவநடவடிக்கைக்கு உள்ளது போல் தெரிகின்றது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்போரின் போக்கினை மாற்றியமைத்துவிடக்கூடிய சமர்களாக அமைந்துவிடவில்லை. இவை போராட்டத்தில் ஒரு தற்காலிகப் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளதே தவிர போரின் போக்கினைச் சிங்களப்படையணிக்குச் சாதகமாக மாற்றியமைத்துவிடவில்லை. ஆழமான அரசியல், இராணுவ அறிவுடன் நிகழ்வுகளை ஆராயும்போதே இதனை உணர்ந்து கொள்ள முடியும். அதேவேளை இச்சமர்கள் சில பாடங்களையும் தமிழர் தேசத்திற்கு வழங்கியுள்ளன. இப் பாடங்களை உள்வாங்கிக்கொள்வதும்,

www.padippakam.com

அவற்றிலிருந்து அடுத்தகட்டத்திற்கு உயிர்த்துடிப்புடன் எழுவதும் இன்று தமிழர் தேசத்தின் வரலாற்றுப் பணியாக உள்ளது.

இவ் வரலாற்றுப் பணிகுறித்த பதிவுகளை புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் முகமாகவே இச்சிறுநூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலில் இரு கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. 1996 பங்குனிமாதம் 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையில் தி. இனியவன் எழுதி வெளியாகிய 'யாழ்ப்பாணப்படையெடுப்பு தமிழ் மக்களுக்கான ஒரு செயன்முறைப்பாடம்' எனும் கட்டுரையும், திலீபன் எழுதிய 'சூரியக்கதிர் சுட்டெரித்துவிடுமா விடுதலை உணர்வை?' எனும் பதிக்கப்படாத கட்டுரையும் இந்நூலில் இடம்பெறுகின்றன. முதலாவது கட்டுரையில் வலிகாமச்சமர் பற்றிய ஒரு முழுமையான பரிமாணத்தினை வாசகர்கள் பெற்றுக்கொள்ளமுடியும். தமிழர் படையணியின் போராளிகள் வலி காமச் சமரை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதனை அறிந்து கொள்ளமுடியும். "வலிகாமத்தினைக் காப்பாற்ற தமிழர் படையணியால் முடியாமல் போனது ஏன்" என்ற கேள்விக்கு தெளிவான விடையினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இரண்டாவது கட்டுரை சூரியக்கதிர் இராணுவநடவடிக்கைகளுக்கு பின்னதான நிலைமைகளை விபரிக்கின்றது. தமிழீழ விடுதலைப்போரில் தமிழர் தேசம் வெற்றிபெறக் கூடிய சாத்தியங்களையும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துரைக்கின்றது. இன்றைய அரசியல், இராணுவ நிலைமைகளை அலசுபவர்கள் அனைவரும் இந் நூலைப் படிப்பதன் ஊடாகத் தமது பார்வைகளை விரிவாக்கிக் கொள்ளமுடியும்; விவாதங்களைக் கூர்மைப்படுத்திக்கொள்ளமுடியும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறையும் போது இவ்வெளியீடும் வெளிவருவது எமக்கு நிறைவைத் தருகின்றது. இந் நூல் தொடர்பான உங்கள் விமர்சனங்களை வரவேற்கிறோம்.

05.05.1996

தாய்நிலம் பதிப்பகம்
P.boks 1699, Vika
0110 Oslo
Norway



படிப்பகம்

www.padippakam.com




# யாழ்ப்பாணப் படையெடுப்பு:

## —தமிழ் மக்களுக்கு ஒரு செயன்முறைப்பாடம்

- தி. இனியவன்.

(விடுதலைப்புலிகள், பங்குனி 1996)

நிகழ்த்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு சமருக்கான போர் முறைத்திட்டத்தை வரைகின்றபோது சிந்தனையின் மையமாக இருக்க வேண்டிய ஒரு அடிப்படைக் கோட்பாடு பற்றி, படைத்துறைப் பேரறிஞர் சன் சூ* அறிவுறுத்தியுள்ளார். "யுத்தக் கலை" குறித்து அவர் விவரிக்கையில் -

"உன்னை அறி; எதிரியை அறி- உனது பலவீனங்களையும் எதிரியின் பலங்களையும் கண்டறி- அதன்பின்பு- தோல்வி பற்றிய கவலையே இன்றி நூறு சமர்களை நீ நடத்தலாம்" என்று போதிக்கின்றார்.

அந்தப் போதனையினூடு சிந்தித்து புலிப்படையினதும் -சிங்களப் படையினதும் பலச்சமநிலையை ஆய்ந்ததன் பெறுபேறாக 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கை எதிரியின் திட்டமிடலில் இருந்த போதே செயல்வடிவம் பெறும்போது அது அடையப் போகும் முடிவை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்திருந்தது.

தனது இராணுவ இலக்கை எய்திடும் சாதகத் தன்மையை எதிரி கொண்டிருக்கிறான் என்பதை நாம் புரிந்துகொள்வதற்கு எந்த ஒரு காரணமுமே தடையாக இருக்கவில்லை.

பொதுவாக இராணுவ உலகில் யுத்தமுறை இருவகைப்படுத்தப் பட்டுள்ளது. ஒன்று ***மரபுவழியுத்தமுறை*** எனப்படும் நேரடிப்போர். அடுத்தது

*சன் சூ சீன தேசத்தினைச் சேர்ந்த ஒரு படைத்துறைப் பேரறிஞர். இவர் கி.மு. 5ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர்

படிப்பகம்

www.padippakam.com



***கெரில்லா யுத்தமுறை*** எனப்படும் கரந்தடிப்போர்.

மரபுவழிப்போர்முறையில் படையெடுப்பாய் நிகழும் ஒரு நேரடிச்சமரின் முடிவை- ஆட்பல சக்தியையும் போர்க்கலச்சக்தியையும் இணைத்த முழுமைப்படுத்தப்பட்ட படைபலமே தீர்மானிக்கின்றது. இத்தன்மையற்ற மறுதரப்பின் மனோதிடமும் மதிநுட்பமும் எதிரியின் வெற்றியைத் தாமதப்படுத்தமுடியுமேயன்றி, ஒரு போதுமே தடுத்துவிடமுடியாது.

அதேசமயம் -

கெரில்லாப் போர்முறையில் அதிரடியாய் நிகழும் ஒரு கரந்தடித் தாக்குதலின் முடிவை- மனோதிடத்தையும் மதிநுட்பத்தையும் இணைத்த தந்திரோபாயம் மிக்க திட்டமிடலே தீர்மானிக்கின்றது. இத்தன்மையற்ற மறுதரப்பின் ஆட்பலசக்தியும் போர்க்கலசக்தியும் எதிரி பெறும் வெற்றியை முழுமையற்றதாக்கலாமேயன்றி, ஒருபோதுமே முறியடித்துவிட முடியாது.

'சூரியப்பிரகாசம்' படையெடுப்பு முதல்வகையைச் சேர்ந்தது. அது மரபுவழிப்போர்முறையிலான ஒரு சமர். அந்தவகையில் -

ஏற்கனவே தான் முன்னேறி நிலைகொண்டிருந்த புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இருந்து, 1995ம் ஆண்டின் ஒக்ரோபர் 17ம் நாள் சிங்களப்படை ஆக்கிரமிப்பைத் தொடங்குவதற்கு முன்னராகவே எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணம் நோக்கிய இறுதித்தாக்குதலின் முடிவும், எதிர்பார்க்கப்பட்டதாகவேதான் இருந்தது.

எனினும் -

தமிழினத்தின் தன்மானத்தின் மீதும், இனக் கௌரவத்தின் மீதும், நகர்த்தப்படுகின்றது என்பதற்காக யாழ்ப்பாணப்படையெடுப்பை எதிர்கொண்டே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியிருந்த நிலையில் -

சாதுரியமாகவும் தந்திரோபாயமான வழிமுறைகளூடாகவும் படையணிகளை நகர்த்திய புலிகளின் தளபதிகள், எமது தரப்பில் பேரிழப்புகள் ஏற்படாதவகையான போர்நுட்ப உபாயங்களூடாக சமரை நெறிப்படுத்தினர்.

உன்னத பண்புகள் மிக்க சீரிய சமுதாயக் கட்டமைப்போடு நாம் கொண்டிருந்த கௌரவமான வாழ்முறையைக் குலைத்து எம் சொந்தத் தொட்டில்களில் இருந்து - எங்களில் ஐந்தரை இலட்சம் பேர்களைக் குடியெழுப்பி, ஓரிரு இரவுகளிலேயே புலம்பெயரச்செய்து சொல்லில் அடங்காத் துன்பத்திற்குள் தோய்த்துவிட்ட ஒரு ஆக்கிரமிப்பு என்ற ரீதியில் -

படிப்பகம்

www.padippakam.com




'சூரியப்பிரகாசம்' சமரை இராணுவரீதியில் கற்றுணர்ந்து விளங்கிக் கொள்வது -

தமிழ்த் தேசிய இனம் தனது எதிர்காலம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவை எடுப்பதற்கு தான் இனிச் செய்யவேண்டியது என்ன என்பது குறித்த தெளிவான ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு மிகச் சரியான வழியைக் காட்டும்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான எத்தனிப்பு எடுக்கப்பட்டது இதுதான் முதற்தடவை அல்ல; தனது நேரடிக் கட்டுப்பாட்டை அங்கு இழந்துவிட்ட காலத்தில் இருந்தே, அதனை மீளக் கைப்பற்றுவதற்கான இராணுவ முனைப்புக்களில் சிங்களத்தேசம் கிரமமான முறையில் ஈடுபட்டேதான் வந்தது.

ஜெயவர்த்தனாவுடன் அத்துலத்முதலியும், பிரேமதாசாவுடன் ஜெனரல் ரஞ்சன் விஜேரட்ணாவும், விஜேதுங்காவுடன் லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவும், சந்திரிகாவுடன் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவும் என, அரியாசனத்தில் அமர்ந்த ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்ட ஒரு பத்தாண்டுகால முயற்சி அது.

1986ம் ஆண்டு ஜூன் திங்களில், குடாநாட்டைச் சூழவிருந்த எட்டு முகாம்களில் இருந்து முப்படைகளையும் ஒருங்கிணைத்து சமநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பல்முனைப் படைநகர்வுதான், குடாநாட்டிற்குள் தமது இராணுவ - நிர்வாகக் கட்டுப்பாட்டை மீளவும் நிலைபெறச் செய்ய சிங்கள ஆட்சி எடுத்த முதலாவது காத்திரமான படை நடவடிக்கை ஆகும்.

இதன் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்ட - கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பித்தபோது முடித்துவைக்கப்பட்ட, வடமராட்சியின் ஊடான "ஒப்ப ரேசன் லிபரேசன்" -

சிங்களத் தேசத்தின் மடியிற் பிறந்த இன்னொரு துட்டகைமுனுவாகப் போற்றப்பட்ட லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவையும் மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ண, றியர் அட்மிரல் மோகான் ஜெயமகா உட்பட அவரது தளபதிகளையும் வீழ்த்திய அராலிக் கண்ணிவெடியோடு கருச் சிதைவுக்குள்ளாக்கப்பட்ட தீவுப்பகுதியினூடான "ஒப்பறேசன் பைனல் கவுண்டவுண்".

வரலாற்றுப் புகழைப் பெற்ற புலோப்பளை அதிரடியோடு பாதிவழியில் தடம்புரண்டு மீதிவழிசெல்லாமல் வந்த வழி திரும்பிய தென்மராட்சியின் ஊடான "ஒப்பறேசன் யாழ்தேவி".

"முன்னேறிய பாய்ச்சல்" மீது எதிர்ப்பாய்ச்சலாக வீழ்ந்த "புலிப்

படிப்பகம்

பாய்ச்ச''லோடு பின்னோக்கிச்சென்றுவிட்ட வலிகாமம் மேற்கினூடான ஒப்பறேசன் ''லீப் போவேட்'' என்ற வரிசையின் கடைசி நடவடிக்கை தான் -

வலிகாமம் கிழக்கினூடான ''சூரியப்பிரகாசம்'' எனப்படும் ''ஒப்பரேசன் றிவிரெச'' ஆகும்.



கடந்த ஒரு தசாப்த காலமாக, தமிழர்களின் தளராத கோட்டையாகத் திகழ்ந்தது யாழ்ப்பாணம். தமிழ்ச்சமூகத்தின் சமூக பொருளாதார வாழ்வினதும், அதற்கே உரித்தான பண்பாட்டு வழக்கங்களினதும் உறைவிடமாக மட்டுமல்ல; பெருக்கெடுத்துப் பாயும் விடுதலைப் புரட்சிப் பேராற்றின் மைய ஊற்றுக் கண்ணாகவும் விளங்கியது யாழ்ப்பாணம். சிங்களப் பகுதிகள் எதுவும் எல்லையாக இல்லாமல், சர்வதேசக் கடலை மட்டுமே வேலியாகக் கொண்டு தமிழர்கட்குப் பாதுகாப்பான ஒரு புவியியல் அமைவிடத்தைப் பெற்றுள்ள தமிழீழத்தின் தனித்துவமான ஒரு தரைப்பகுதியாகக் கொலுவிருப்பது யாழ்ப்பாணம். ஆதலால் ஆண் டாண்டு காலமாக அல்லற்பட்ட தமிழினம் எங்கெல்லாமோ இருந்து ஓடிவந்த போதெல்லாம் தாய்மடியாகி அரவணைத்தது யாழ்ப்பாணம்.

அத்தகைய மகுடங்களைச் சூடிய எம் மண்ணைக் காக்க தேசத்தின் அத்தனை பிரதேசங்களையும் சேர்ந்த படைவீரர்களும் போரிட்டுள் ளார்கள். எதிரிகளின் சுடுகுழல்களின் முன்னால் அரண்களாய் வீழ்ந்துள் ளார்கள். எதிரியின் ஒவ்வொரு படையெடுப்பையும் முறியடித்து ஒவ் வொருதடவை தோல்வியைத் தழுவுகையிலும் முன்னையதைவிட கூர்மைப்பட்ட படையெடுப்பை அவன் அடுத்த தடவை ஏவிவிடுகையில் அதனையும் முறியடித்து, பத்தாண்டு காலமாக யாழ். மண்ணைக் காத்த இரும்புக்கவசமாக நாம் விளங்கினோம்.

இலங்கைத் தீவு முழுவதிலும், குறிப்பாக வடக்குக் கிழக்குப் போர் அரங்குகளில், தனது படைபலம் சிதறிக்கிடந்ததால் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன், தான் மேற்கொள்ளவேண்டியிருந்த யாழ். குடா மீதான முன்னைய படையெடுப்புகள் மூலமாக தனது இலக்கினை அடைய முடி யாமற்போன சிங்களப்படைத்துறை -

அந்தப் பட்டறிவில் கற்ற போரியல் பாடங்களில் இருந்து 'சூரியப் பிரகாசம்' படைநகர்வைத் திட்டமிட்டது. ஒருங்கிணைந்த படைபலத்தை ஒரே தளத்தினூடு பிரயோகித்து புலிகளை அழித்து அல்லது அகற்றி முன்னேறுவதுதான் 'சூரியப்பிரகாசத்தின்' மூலோபாயமாகும்.

படைபலச் சமநிலையில் எம்மைவிட எதிரி மேலோங்கியிருந்த போதும் கூட, சிலவேளைகளில் அதிஸ்டமும் பலவேளைகளில் திறமையும்

www.padippakam.com


துணைநின்றதால் எம்மால் முறியடிக்கமுடிந்த முன்னைய படையெடுப்புக் களைப் போல இல்லாமல் எம் கைகளை மீறிக் கடந்த 'சூரியப்பிரகாசம்' படையெடுப்பு முற்றுமுழுதாக படைப்பலத்தின் கைகளிலேயே வீற்றிருந்தது.



எதிரியானவன் மிகமிகப் பெரும் எடுப்பில் தன்னைத் தயார்ப்படுத்தினான். அரசியல் தீர்வை அடைவதற்கான இராணுவ வழிமுறை என்று, அன்னிய நாடுகளிடம் ஆசீர்வாதம் பெற்றான். முன்னைய ஆட்சியினர் எழுதிய படைத் தளபாட உடன்படிக்கைகளைப் புதுப்பித்துப் போர்க்கலங் களைக் கொள்வனவு செய்தான்; யாழ்ப்பாணப் போர்முனை எனும் சதுரங்கமேடையில் வெற்றியீட்டுவதற்காக தனது கட்டுப்பாட்டில் இருந்த சில தளப்பிரதேசங்களைக் கைவிடவும் சித்தமானான். கிழக்குப் பிராந்தியத்தில் நிலை கொண்டிருந்த தனது கணிசமான போரணிகளை வெளியேற்றி, வடக்குக்கு நகர்த்தினான். தனது வழங்கற்பாதைகளை அடிக்கடி தாக்கி புலிகள் சேதப்படுத்தியபோதும் கடலூர்திகளிலும் வானூர்திகளிலும் படை வீரர்களை ஏற்றி அபாயங்களை ஊடறுத்துப் பலாலிக்குக் காவினான்.

ஏற்கனவே இருந்த பத்தாயிரம் பேருடன் இன்னும் கூடுதலான இருபத்தையாயிரம் துருப்புக்களை செருக்களத்தில் குவித்தான்; முப்படையின் பணிகளையும் ஒருமுகப்படுத்தினான்; தனது வரலாற்றில் என்றுமே இல்லாத பெரும் ஆளணி, ஆயுதக் குவிப்பைச் செய்து, யாழ்ப்பாணச் சமருக்குப் பகைவன் ஆயத்தப்படுத்தினான். சிறிலங்கா நாட்டின் தேசிய படைபலத்தை முழுமையாகத்திரட்டி 'சூரியப்பிரகாசத்தினூடு' பிரயோகித்தான்.

மிகமிக அதிகமான படைக்கலச்சக்தியோடு, போதிய அளவுக்கும் மிகையாக ஆயிரக்கணக்கான டசின் துருப்புக்கள் அங்கம் வகித்த அதிகாரபூர்வமான ஒரு தேசியப்படையை நகர்த்தி, நீண்டதொரு மரபுவழிச்சமராக எதிரி அரங்கேற்றிய யாழ்ப்பாணப்படையெடுப்பை மிகக்குறைந்த ஆட்பலத்துடன், அரைகுறையான வழங்களுடன், முழுமையற்ற படையமைப்பைக்கொண்ட கெரில்லா இயக்கம் ஒன்று எதிர்கொள்ளவேண்டியிருந்தது. "முன்னேறிய பாய்ச்சலை" முறியடித்ததுபோல இதனையும் தடுத்துநிறுத்தமுடியாமல் போனது ஒரு அதிசயமேயல்ல. ஏனெனில் இரண்டிற்குமிடையிலான இராணுவப் பரிமாணம் வேறுபட்டது.

எல்லாளர் மண்ணை வீழ்த்தி சிங்கக்கொடியை நாட்டிய இன்றைய துட்டகைமுனுவாகவும் 'ஜெனரல்' தரத்திற்கு அருகதையைப் பெற்றுவிட்ட சிங்கள தேசத்தின் ஒரு மாபெரும் போர்த் தளகர்த்தராகவும்

படிப்பகம்

www.padippakam.com



திரும்பிச் சென்ற சிறிலங்காவின் படைத்துறை அமைச்சர் கேணல் "அனுருத்த" ரத்வத்த 'சூரியப்பிரகாசம்' பற்றி செய்தியாளருக்கு விபரிக்கையில் "முன்னேறும் பாய்ச்சல்" ஒரு முன் ஒத்திகை போல அமைந்துவிட்டது என்றார். அது உண்மைதான்.

12 000 துருப்புக்களையே கொண்ட படையணிகளுடன், தேவையானது எனக் கணிக்கப்பட்ட அளவுடைய வளங்களுடன் மட்டும் ஈடுபடுத்தப்பட்ட அந்தப் படை நடவடிக்கை, புலிகளை முறியடித்து முன்னேறக்கூடிய தாக்குதற்சக்தியைக் கொண்டிருக்கவில்லை; அல்லது அந்த நடவடிக்கையை முறியடிக்கக்கூடிய தற்காப்புச் சக்தியை புலிகள் கொண்டிருந்தனர்.

அந்த முன் ஒத்திகையின் அனுபவத்தைத் தெளிவாக உள்வாங்கிய எதிரி அந்தப் பட்டறிவினூடு தனது இறுதிநடவடிக்கையான திட்டத்தை வரைந்தான். புலிகளை முறியடிக்கக்கூடிய பலத்தை அல்லது புலிகளால் முறியடிக்கப்படமுடியாத பலத்தைத் திரட்டுவதற்காக "முன்னேறிப் பாய்ச்ச"லைப்போல மும்மடங்கு ஆட்தொகையும், பன்மடங்கு படைக் கலத்தையும் தயார்ப்படுத்தினான். முனைப்பான ஏற்பாடுகளில் அவன் மூன்றுமாதகாலமாக ஈடுபட்டான். ஆனால், நடந்த தவறு என்னவெனில்-

அந்தக் கால அவகாசத்தை முழுமையான முறையில் பயன்படுத்தி தமிழர் படையைத் தயார்ப்படுத்த வருமாறு புலிகள் விடுத்த அழைப்பைத் தமிழ் இளம்பரம்பரை செவிமடுக்காதுவிட்டுவிட்டதுதான்.

எதிரியின் பலம் மடங்குகளால் அதிகரித்தபோது, எமது பலம் இருந்த அளவிலேயே இருந்ததது. "லீப் போவேட்" இற்கும் "றிவிரெச" இற்கும் இடைப்பட்ட காலவேளையில் யாழ்ப்பாணப் போர் அரங்கின் படைபலச் சமநிலையில் எதிரி மேலோங்கி வருகின்ற ஆபத்து நிகழ்ந்தது.

---

***மிகமிக அதிகமான படைக்கலச்சக்தியோடு, போதிய அளவுக்கும் மிகையாக ஆயிரக்கணக்கான டசின் துருப்புக்கள் அங்கம் வகித்த அதிகாரபூர்வமான ஒரு தேசியப்படையை நகர்த்தி, நீண்டதொரு மரபுவழிச்சமராக எதிரி அரங்கேற்றிய யாழ்ப்பாணப் படையெடுப்பை மிகக்குறைந்த ஆட்பலத்துடன், அரைகுறையான வழங்களுடன், முழுமையற்ற படையமைப்பைக்கொண்ட கெரில்லா இயக்கம் ஒன்று எதிர்கொள்ளவேண்டியிருந்தது. "முன்னேறிய பாய்ச்சலை" முறியடித்ததுபோல இதனையும் தடுத்துநிறுத்த முடியாமல் போனது ஒரு அதிசயமேயல்ல. ஏனெனில் இரண்டிற்குமிடையிலான இராணுவப் பரிமாணம் வேறுபட்டது.***

---

www.padippakam.com




"முன்னேறும் பாய்ச்ச"லை முன்னுதாரணமாகக் கொள்ளுமாறு தான் இங்கும் கேட்கப்பட்டது. புலிகளிடம் உள்ள சண்டைப்பலம் அதை முறியடிக்கமட்டுமே போதுமானதாக இருந்தது என்பது விளக்கப்பட்டது. அதைவிடவும் அதிகபலம் செலுத்தப்படுமானால். முறியடிப்பது இயலாத காரியமாகலாம் என்பது தெளிவுபடுத்தப்பட்டது; எதிரி அவ்விதமான ஒரு முயற்சிக்கே ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறான் என்பது எடுத்துச் சொல்லப்பட்டது. அன்றைய அனர்த்தங்களின் அவலங்கள் ஒளிப்படங்களாய்க் காட்டப்பட்டது. எதிரி நகர்ந்தால் என்ன நடக்கும் என்பது உணர்த்தப்பட்டது. யாழ்ப்பாணம் மீது நடாத்தப்படப் போகின்ற உறுதியான இறுதித் தாக்குதலை முறியடிக்க புலிப்படையில் இணைந்து தமிழரின் தேசிய படைபலத்தைப் பெருக்குமாறு யாழ்ப்பாணச் சமூகத்தின் இளம் சந்ததியை நோக்கி முரசறையப்பட்டது. சந்துபொந்துகளில் எல்லாம் தேடிச் சந்தித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் அந்த அழைப்பை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் கிரகித்து புரிந்துணர்வுடன் செயற்பட எமது இளம் சமூகம் வேண்டியளவுக்கு முன்வரவில்லை. விளைவு -

வலிகாமத்தின் முற்றத்தில் இருந்து எம்மைக் குடியெழுப்பிக் கலைத்ததற்காக "பரம வீர விக்ரம" என்ற உயர் விருதைப் பெற்றுக்கொண்ட மேஜர் ஜெனரல்கள் ரோகான் தளுவத்தவும், சிறிலால் வீரசூரியவும், பிரிகேடியர் ஜானக பெரேராவோடு ஏனைய நடவடிக்கைத் தளபதிகளும் அடுத்த படையெடுப்புக்கான போர்முறைத் திட்டத்தை இப்போது வரைந்துகொண்டிருக்கின்றார்கள்.

பன்னிரண்டுவருடப்போரில் இதுகாலவரை ஒருங்குதிரட்டியிராத விதமாக தனது முற்றுமுழுதான படைக்கலச் சக்தியையும் எதிரி யாழ்ப்பாணச் சமரில் ஒருங்கிணைத்திருந்தான். யாழ். நகரைக் கைப்பற்றுதல் என்ற தனது இராணுவ இலக்கை எய்தும் நாள்வரை சமரைத் தொடர்ந்து செல்லுவதற்குச் சாதகமாக, ஒவ்வொரு நாள் சண்டைகளிலும் எவ்வித மட்டுப்படுத்தல்களும் அற்று பாவிக்கக்கூடியதாக போர்க்கருவிகளுக்கான வெடிப்பொருட்களை எதிரி குவித்திருந்தான். இங்கு, எதிரியின் எறிகணைகளே முக்கியமானவை. சமர் அரங்கின் பிரதான பாத்திரத்தை அவைதான் வகித்தன. எமது தரப்பில் இருந்து சுடப்பட்ட ஒவ்வொரு சன்னத்திற்கும் எதிரி பத்துவரையான எறிகணைகளை ஏவியே பதிலளித்தான் என்று சொன்னால் அது ஒரு பொய்யான வருணிப்பு அல்ல. எமது போராளிகளுக்குப் பேரழிவுகளை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமல்லாமல், தகவல் தொடர்பு சாதனங்களின் அலைவரிசைகளைக் கிரகித்து ஒலிபரப்பாகும் பீடத்தைக் கண்டறியும் Direction finder கள் மூலம் எமது கட்டளை

படிப்பகம்

www.padippakam.com



மையங்களை இனங்கண்டு தாக்கவும் எதிரிக்கு எறிகணைகள் துணை நின்றன. கட்டளைப் பீடங்களையும், தளபதிகளையும் குறிவைத்துத் தாக்கி எமது சண்டை அணிகளின் ஒழுங்கமைவுகளைச் சீர்குலைக்க வேண்டிய தனது தேவையை நிறைவுசெய்வதற்காக பலாலியின் ஆட்டிலறி ஏவுதளங்களில் இருந்து எதிரி எறிகணைகளை வீசினான். சுருங்கக்கூறின் எதிரியின் சார்பில் எறிகணைகள்தான் சண்டை பிடித்தன எனலாம். சிங்களத் தரைப்படையின் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டீ சில்வா, 'சண்டே ரைம்'சுக்கு வெற்றிப் பெருமிதத்தோடு வழங்கிய செவ்வியில், "ஆட்டிலறி மற்றும் மோட்டர் பீரங்கி"களுக்கு தனது "மனமார்ந்த நன்றி"யைத் தெரிவிப் பதிலிருந்தே, அவை வழங்கிய அதி உச்சப் பங்களிப்பை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

எமது சண்டையணிகளின் அசைவுகளைத் தடுத்து, கட்டமைப்புக்களைக் குலைத்து- அவற்றின் போர்த்திறனைச் சிதைத்து விடுவதற்காக எதிரி நிகழ்த்திய வரையறைகளற்ற ஆயுதபலப் பிரயோகம், களத்தில் நின்ற எம் வீரர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது உட்பட- நாம் எதிர் கொண்ட சிக்கல்கள் எல்லாமே, எமது ஆட்பற்றாக்குறையில் மையங் கொண்டவையாகவே இருந்தன.

ஆயுதபலம் போதாமை எமது சண்டைகளுக்கு இடையூறாகத்தான் இருந்தது. எனினும், ஆட்தொகைப் பற்றாக்குறைதான் அதை விடவும் பாரிய சிக்கலைத் தந்தது.

படையினரின் நகர்வுகளைக் கட்டுப்படுத்தி- வெளியேறி நடமாட முடியாமல் முகாம்களுக்குள் முடக்கி, அவர்களது ஆதிக்கத்தின் கீழிருந்து சில பிரதேசங்களை விடுவித்து-ஒரு நிழல் நிர்வாக இயந்திரத்தை இயக்குவிப்பதற்கான பாதுகாப்பை வழங்க, எம்மிடமிருந்த படைபலம் போதுமானதாயிருந்தது. இதுவரை காலமும் அவ்வாறானதொரு கட்டுப்பாட்டுத் தளப்பிரதேசமாக குடாநாட்டையும் வைத்திருக்கமுடிந்தது. ஆனால்- தற்போதைய படைபலத்தை வைத்துக்கொண்டு, எத்தகைய பேரபாயம் நேரிடினும் குடாநாட்டைப் பாதுகாத்து நிற்கமுடியும் என்று, நாம் எப்போதுமே நம்பியிருந்ததில்லை; ஏனெனில்-எமது சுயபலம் பற்றிய சரியானதொரு மதிப்பீடு எம்மிடமிருந்தது. மிகப் பெருமெடுப்பில் நிகழப் போகும் சிங்களப் படையெடுப்பிலிருந்து குடாநாட்டைக் காக்கவேண்டுமெனில் எமது படைபலம் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கப்படவேண்டுமென்றுதான் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தோம். ஒரு தேசியக் கடமையாக அதனை ஆற்ற அணிதிரண்டு வருமாறு இளைய உள்ளங்களை வேண்டி நின்றோம். அப்போது, 'இயக்கம் விடாது' என்று சொல்லிக்கொண்டு எல்லாரும் அவரவர் அலுவல்களைப் பார்த்துக்

படிப்பகம்

www.padippakam.com


கொண்டிருந்ததன் விளைவை, இப்போது நாம் ஒவ்வொருவருமே அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

மரபுவழிச் சமரொன்றுக்குத் தயார்ப்படுத்தப்படுகின்ற ஒரு போரணி, தனது முன்னணித் தாக்குதற் பிரிவைத் தவிரவும், பின்களச் செயற்பாடுகளுக்காக முக்கியமான நான்கு உப அணிகளை மேலதிகமாகக் கொண்டிருக்கும் என்பது, ஒரு பொதுவான போரியல் நடைமுறையாகும்.



*தற்போதைய படைபலத்தை வைத்துக்கொண்டு, எத்தகைய பேரபாயம் நேரிடினும் குடாநாட்டைப் பாதுகாத்து நிற்கமுடியும் என்று, நாம் எப்போதுமே நம்பியிருந்ததில்லை; ஏனெனில் — எமது சுயபலம் பற்றிய சரியானதொரு மதிப்பீடு எம்மிடமிருந்தது. மிகப் பெருமெடுப்பில் நிகழப்போகும் சிங்களப் படையெடுப்பிலிருந்து குடாநாட்டைக் காக்க வேண்டுமெனில் எமது படைபலம் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கப் படவேண்டுமென்றுதான் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தோம். ஒரு தேசியக் கடமையாக அதனை ஆற்ற அணிதிரண்டு வருமாறு இளைய உள்ளங்களை வேண்டிநின்றோம். அப்போது, 'இயக்கம் விடாது' என்று சொல்லிக்கொண்டு எல்லாரும் அவரவர் அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருந்ததன் விளைவை, இப்போது நாம் ஒவ்வொருவருமே அனுபவிக்கவேண்டியவர்களாக உள்ளோம்.*

தாக்குதலணிக்கான வெடிப்பொருட்களையும் கருவிகளையும் விநியோகிக்கும் வழங்கற்குழு, காயமடையும் - களப்பலியாகும் வீரர்களைப் பின்னுக்கு அகற்றும் காவும் குழு, தாக்குதலணியோடு களத்திலிறங்கி காப்பு நிலைகளை நிறுவும் அரணமைக்கும் குழு, இந்த அத்தனை குழுக்களோடும் கலந்தும் தனித்தும் இயங்கும் மருத்துவக்குழு என்பவையே அவையாகும். இங்கு முன்னணித் தாக்குதற்பிரிவைப் போன்று, சில சமயங்களில் அதை விடவும் அதிக எண்ணிக்கையானோர் பின்களவேலைகளுக்கெனத் தேவைப்படுவர்.

இச்சூழ்நிலையில் - படையெடுப்பை முறியடிக்கும் மூலோபாயத்திற்காக ஊடுருவித்தாக்கும் தந்திரோபாயம் ஒன்றை நாம் செயற்படுத்தவேண்டுமெனில் இத்தனை குழுக்களையும் கொண்ட இன்னொரு போரணியை உருவாக்கப் பெருமளவு வீரர்கள் தேவையாக இருப்பர்.

யாழ்ப்பாணச் சமரில், எதிரிப்படையினரது எண்ணிக்கையைவிட பல மடங்கு குறைவான ஆட்தொகையைக் கொண்ட புலிவீரர்களே - எதிரியைப்போல பிற பௌதீக வசதிகள் எதுவுமற்ற நிலையில் - களத்தில் நின்றனர் என்பது இங்கு சொல்லப்படவேண்டிய ஒன்றாகும்.

படிப்பகம்

காப்பரண்களை நிறுவும் வேலைகளில் பெருமளவிலான உதவிகளை எமது மக்கள் செய்திருப்பினும்கூட, அவர்களைக் கூட்டிச்செல்ல முடியாத -உயிராபத்துநிறைந்த சண்டையின் முன்னணி நிலைகளில், எமது போராளிகளே அரணமைக்கும் வேலைகளிலும் ஈடுபட வேண்டியிருந்தது. யுத்த முனைகளில் இயல்பாகவே நிலவக்கூடிய சீரற்ற உணவு விநியோகத்தின் மத்தியில், அவர்கள் தமது சக்திக்கு மீறித் தொழிற் பட்டார்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் 48 மணிநேரத்திற்கு மேல் தூக்கமற்றும் செயற்பட்டார்கள்; பகலில் சண்டையிட்ட பின் இரவில் அரண்களைச் சீரமைத்து நிலைகளைப் பலப்படுத்திக்கொண்டு, அடுத்த நாள் சண்டைக்காக விடியும்வரை விழித்திருந்தார்கள். இது வெறும் புகழ்ச்சியில்லை; மிகைப்படுத்தலுமில்லை.

உறுமிவரும் 'டாங்கி'களின் பீரங்கிக் குழல்வாய்கள் நெருப்புமிழும் அதி காலை இருளில் பகைவன் அன்றைய களத்தைத் திறப்பான்! தாக்கி முன்னேறும் அவனது சண்டையணி எறிகணைகளின் மனமார்ந்த உறு துணையோடு ஊரத் தொடங்கும்! இயந்திரத் துப்பாக்கிகள் இதயம் திறந்து பேசிக்கொள்ள, இறுக்கமாய் வெடிக்கும் சண்டை! உடைத் தெறிந்து விரைய முனைந்து உக்கிரமாய்த் தாக்கும் பகையணியைத் தடுத்து, உருக்கின் கவசமெனப் புலியணி பொருதும்! மூர்க்கத்தனமாய் மோதிப் பகையை முறியடிக்கும்! களமெங்கும் எதிரிகளின் சடலங்கள் வீழும்! பீரங்கிக் கவச வண்டிகள் பிளக்கும்! எஞ்சியவை ஓடும்! பகையணி சிதறும்! சின்னாபின்னமாகும்! இருந்த நிலைகளை விட்டே பின்வாங்கி ஓடும்! அந்தக் கணப்பொழுதில் களத்திலிறக்கி, பகைவனை விரட்டிய முனைகளில் நிலைப்படுத்தி, அரண்களைப் பலப்படுத்தி உறுதியாய் நிறுத்திவிட மேலதிக படையணிகள் எம்மிடமில்லை. அத்தகைய எமது பாதக நிலைதான், எதிரிக்கு வாய்த்த சாதகமாகும்.

சண்டையில் விளைந்த எம்பக்கப் பாதிப்பை எமதணி நிவர்த்தி செய் வதற்குக்கூட அவகாசமில்லாமலேயே- தயாராய் நிறுத்தப்பட் டிருக்கும் இன்னொரு தாக்குதற்பிரிவை எதிரி களத்திலிறக்குவான்; பலவீனப்பட்ட அணியைப் பின்னாலும், பலமான புது அணியை முன்னாலும் சம நேரத்தில் நகர்த்துவான். உக்கிர சண்டைக்கு நடுவில் மிகக் குறுகிய நேரத்திற்குள் அதுநிகழும். திடீரென-எதிர்பாராதவிதமாக களத்தில் எதிரியிடமிருந்து புதுத் தெம்பு பெற்ற தாக்குதல் வரும். சேதப்பட்டு, சோர்வுபட்டு ஆரம்பச் சண்டை யிலேயே எமதணி தளர்வடைந்திருப் பினும் தொடர்ந்து மோதும். இயலாமைக்கு அப்பாலும் முயலும். மனங் குலையாமல் அது சண்டையிட களம் நீளும்; களம் நீளக் களம் நீள, எதிரி இறக்கிய இரண்டாவது அணியும் தளர்வடையும். வீரர் விழவும், சண்டைத்

www.padippakam.com


திறன் குறையவும் பலவீனப்படும் எதிரியணி நிலை குலையும். அப்போது-எதிரியானவன் தனது மூன்றாவது தாக்குதற்பிரிவை சண்டையிலிறக்குவான்; நிலைமை சிக்கலாகும். தொடர்ந்தும் தாக்குப்பிடிப்பது எமக்கு முடியாத காரியமாகும்; தடுத்துச் சண்டையிட இயலாத நிலை களத்தில் தோன்றும்.



**உறுமிவரும் 'டாங்கி'களின் பீரங்கிக் குழல்வாய்கள் நெருப்புமிழும் அதிகாலை இருளில் பகைவன் அன்றைய களத்தைத் திறப்பான்! தாக்கி முன்னேறும் அவனது சண்டையணி எறிகணைகளின் மனமார்ந்த உறுதுணையோடு ஊரத் தொடங்கும்! இயந்திரத் துப்பாக்கிகள் இதயம் திறந்து பேசிக்கொள்ள, இறுக்கமாய் வெடிக்கும் சண்டை!**

சிதைவடைந்துவிடுவதால் மட்டுமல்ல; சண்டைகள் நீண்டுசெல்லும் சந்தர்ப்பங்களில், தனது போரணியின் வீரர்கள் களைப்படைந்து விடாமல் அவர்களுக்கு ஓய்வுகொடுப்பதற்காகக் கூட அடுத்த அணியைச் சண்டையிலிறக்கி, அவர்களைப் பின்னுக்கு எடுப்பான் பகைவன். அவனிடம் வளமிருந்தது; ஆளணியின் பலமிருந்தது.

எம்மிடம் மாற்றிவிட அணிகளுமிருக்கவில்லை, ஏதாவது மாற்றுவழிகளும் இருக்கவில்லை. சமரைத் தொடர்ந்து நடாத்தவேண்டியதற்காகவும், எமது இழப்புக்களை வரையறைக்குள் வைத்திருப்பதற்காகவும் நாம் தந்திரோபாயரீதியாகப் பின்வாங்கவேண்டியவர்களாக இருந்தோம். "சூரியப் பிரகாசம்" எழுந்த ஒவ்வொரு நாளைய சண்டைகளின் முடிவிலும் எமது சக்திக்கு மீறிய ஒரு நிர்ப்பந்தமாக எதிரி முன்னேறுவதை, மெல்லமெல்ல நாம் அனுமதிக்கவேண்டியிருந்தது. ஆனாலும் -

எதிரியின் நகர்வைத் தடுத்து, பகையணியைத் தாமதிக்கவேண்டிய கட்டாய முடிவொன்றை ஒரு கட்டத்தில் நாம் தவிர்க்கமுடியாததாகச் செயற்படுத்தவேண்டியதாக இருந்தது.

**சிதைவடைந்துவிடுவதால் மட்டுமல்ல; சண்டைகள் நீண்டுசெல்லும் சந்தர்ப்பங்களில், தனது போரணியின் வீரர்கள் களைப்படைந்துவிடாமல் அவர்களுக்கு ஓய்வுகொடுப்பதற்காகக் கூட அடுத்த அணியைச் சண்டையிலிறக்கி, அவர்களைப் பின்னுக்கு எடுப்பான் பகைவன். அவனிடம் வளமிருந்தது; ஆளணியின் பலமிருந்தது. எம்மிடம் மாற்றிவிட அணிகளுமிருக்கவில்லை, ஏதாவது மாற்றுவழிகளுமிருக்கவில்லை. சமரைத் தொடர்ந்து நடாத்தவேண்டியதற்காகவும், எமது இழப்புக்களை வரையறைக்குள் வைத்திருப்பதற்காகவும் நாம் தந்திரோபாயரீதியாகப் பின்வாங்க வேண்டியவர்களாக இருந்தோம்.**

படிப்பகம்

www.padippakam.com



"சூரியப்பிரகாசம்" தனது முடிவை நெருங்கிக்கொண்டிருந்த நொவெம்பர் திங்களின் இறுதிநாட்களில், யாழ்நகரை நாற்புறமும் சூழ்ந்துவிட்ட படையணிகளுக்கு மத்தியில் நின்று, புலிகள் உக்கிரமான அந்தச் சண்டையில் இறங்கினர். சுண்டுக்குளி கச்சேரியடிப்பகுதியூடாகவும், நல்லூர் கந்தர்மடம் பகுதியூடாகவும், நீராவியடி பெருமாள் கோவிலடிப்பகுதியூடாகவும், பண்ணை கொட்டடிப்பகுதியூடாகவும் வியூகமிட்டு முன்னேறிய படையணிகளைப் புலிகள் மூர்க்கத்தனமாய் எதிர்கொண்டனர். தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளன்று அல்லது மாவீரர் நாளன்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, தமிழர்களின் இன கௌரவத்தின் மீது சிங்கக் கொடியை ஏற்றத் திட்டமிட்டு முன்னேறிய சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் பேரினவாத நோக்கத்தை உடைத்தெறியவேண்டிய தமது கடமைப்பாட்டை புலிவீரர்களும் அவர்தம் தளபதிகளும் வெற்றிகரமாக நிறைவேற்றினர்.

வரலாறு காணாத ஒரு பிரமாண்டமான களத்தை எதிர்கொண்டு, 50 நாட்களுக்குச் சமரை நீடித்துச் சென்ற எம் தளபதிகளின் படைநகர்த்தல் திறன் அற்புதமானது; போரியல் வல்லுநர்களையே வியப்புக்குள்ளாக்கியது! முற்றுகையிடப்பட்டுவிட்ட வலிகாமத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ள புலிகள், இனிச் சரணடையவேண்டும்; அல்லது கடலில் குதிக்க வேண்டும்; அல்லது 'சயனைட்'டின் சுவையறிந்து தற்கொலை செய்ய வேண்டுமென எதிரி பிரமாதமாகப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த வேளையில், முற்றுகையிலிருந்து தப்பித்து எப்படிப் படையணிகளை வெளியேற்றினர் என்ற கேள்விக்கு, அல்லது, இன்னமும் வலிகாமத்திற்குள் எப்படிப்படையினர் தாக்கப்படுகின்றனர் என்ற கேள்விக்கு அதிசயப்பதில்! பிரபாகரனின் களநாயகர்களாகி, அவரது எண்ணங்களையும் நுட்பங்களையும் களத்தில் செயற்படுத்தும் வழிநடத்துநர்களாகி "சூரியப்பிரகாச"த்தின் உதயத்திலிருந்து மறைவுவரை சண்டைகளை நெறிப்படுத்திய எம் விடுதலைச் சேனையின் சேனாதிபதிகளது வினைத்திறன் அசாதாரணமானது; எதிரிகளாலேயே வியந்துரைக்கப்பட்டது!

**தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளன்று அல்லது மாவீரர் நாளன்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, தமிழர்களின் இன கௌரவத்தின் மீது சிங்கக் கொடியை ஏற்றத் திட்டமிட்டு முன்னேறிய சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் பேரினவாத நோக்கத்தை உடைத்தெறியவேண்டிய தமது கடமைப்பாட்டை புலிவீரர்களும் அவர்தம் தளபதிகளும் வெற்றிகரமாக நிறைவேற்றினர்.**

தனது படைவீரர்களையிட்டு என்றென்றும் எம்தேசம் தலைநிமிர்த்த முடியும்! "நாங்கள் தமிழர்கள்" எனத் தமிழர்களை இறுமாப்போடு கர்வப்

படிப்பகம்

www.padippakam.com




படைவைத்தவர்கள் அவர்களது பிள்ளைகள்! விடுதலைப்புலிகளின் படையணிகளிலும், தமிழீழ காவல்துறையின் சண்டைப்பிரிவுகளிலும் களத்தில் இறங்கி, பொருதுகளங்களில் எதிரிகளை அவர்கள் திணறடித்தார்கள். யாழ்ப்பாணப்போர்முனையிலும் அது வெடித்த ஓரிரு நாட்களுள், எவருமே எதிர்பார்த்திராத பகையரசின் இன்னொரு மையத்திலும் நம்புதற்கரியவிதமாக, அவர்கள் ஆடிய சண்டைகள், உயிர் சிலிர்க்க வைக்கும் - ஆச்சரியப்போர்க்கதைகள்! யாழ்ப்பாணச் சமரை கடைசி வரைக்கும் நடாத்தியே ஆகவேண்டும் என்ற -அரசியல், இராணுவ ரீதிகளிலானதும் இனமானத்தோடு சம்பந்தப் பட்டதுமான ஒரு தேவைக்காக, தங்களது உடற்பலவீனங்களுக்கு முகம் கொடுத்து அவர்கள் ஆற்றிய உழைப்பு அளப்பரியது; உன்னதமானது. விழுப்புண்பட்டுச் சென்ற வீரர்கள் மருந்திட்டு வந்து போரிட்டார்கள்; மறுபடியும் காயப்பட்டுச் சென்றும் மறுபடியும் களத்திற்கு வந்தார்கள். மூன்றாவது முறையாகப் புண்பட்டவர்களுமுண்டு; அதன்பின்பும் களப்பலியாகிவிட்டவர்களுமுண்டு! எம் தேசத்தின் 674 புதல்வர்கள் இந்த வரலாற்றுச் சமரில் பங்கேற்று "இடிமுழக்கத்"தினதும், "சூரியப்பிரகாசத்"தினதும் கதாநாயகர்களாக யாழ்ப்பாணத்தின் மடியில் வீழ்ந்தார்கள்; எமது மண்ணின் ஒவ்வொரு துணிக்கைக்காகவும் நாம் உயிரீந்து போரிட்ட இன்றைய நாட்களின் இரத்தச் சாட்சிகளாகிச் சரித்திரமானார்கள்!

---

***விழுப்புண்பட்டுச் சென்ற வீரர்கள் மருந்திட்டு வந்து போரிட்டார்கள்; மறுபடியும் காயப்பட்டுச் சென்றும் மறுபடியும் களத்திற்கு வந்தார்கள். மூன்றாவது முறையாகப் புண்பட்டவர்களுமுண்டு; அதன் பின்பும் களப்பலி யாகிவிட்டவர்களுமுண்டு! எம் தேசத்தின் 674 புதல்வர்கள் இந்த வரலாற்றுச் சமரில் பங்கேற்று "இடிமுழக்கத்"தினதும், "சூரியப்பிரகாசத்"தினதும் கதாநாயகர்களாக யாழ்ப்பாணத்தின் மடியில் வீழ்ந்தார்கள்***

---

ஒக்ரோபர் 30ஆம் 31ஆம் திகதிகள் வரலாற்றின் நாட்கள்! புலிகளின் அரசியற்பலம் எனப்படுவது, தமிழினத்தின் ஏகோபித்த பலமேதான் என்பது, உலகத்தின் செவிகளில் முரசறையப்பட்டது! எம் நாட்டின் நிரந்த சுபீட்சமொன்றுக்காக எதைத் துறக்கவும் தயார் என எம்மினம் பறைசாற்றியது! "பாதுகாப்பிற்காகச் செல்லுங்கள்" எனச் சொன்ன அடுத்த நொடியில், எடுத்த பொருளோடு எழுந்து நடந்து, "எவருக்கும் இனி நாங்கள் தலைகுனிந்து வாழத் தயாரில்லை!" என்பதைப் பிரகடனப்படுத்தியது. சோற்றுப் பசி வாட்டித் துவண்டு சாக நேரினும், சுதந்திரப் பசி குன்றித் திரும்பி வரப்போவதில்லை என, எம் மக்கள் நாவற்குழிப் பாலம் தாண்டி நடந்து சென்ற நாட்கள்-

படிப்பகம்

www.padippakam.com

செய்தி அறிந்தபோது ஒவ்வொரு புலிவீரனும் மேனி சிலிர்த்தான்! உள்ளம் நெகிழ்ந்தான்! களத்தில் சண்டையிட்ட ஒவ்வொரு கணத்திலும் அதையே நினைத்தான்! இனம்புரியாத தென்பு பெற்றுச் சமராடினான்! இடப்பெயர் வால் அவர்கள் பட்ட துன்பங்களுக்காக - மனந்துவண்டு, ஊர் துறந்து அவர்கள் செய்த போராட்டப் பங்களிப்புக்காக - சிரம் தாழ்த்தினான்! அவர் களது தேசபக்தியின் முன்னால் மரியாதை வணக்கம் செலுத்தினான்! நெருப்புமழைக்கு நடுவில் களமாடுகையிலும், 'என் மக்கள் என்னோடு!' என்ற இறுமாப்போடு நின்றான். அன்று முதல் இன்றுவரை, அந்த உணர்வுதான் அவர்களது நெஞ்சுக்குள் குமுறுகின்றது. 19

எங்களிலிருந்து எட்டத்திலிருந்தாலும் "என் மக்கள் என்னோடு!" என்ற உணர்வு சுரக்க, தாங்கள் தனித்து விடப்பட்டவர்களல்ல என்ற நினை வோடுதான் - வலிகாமத்தின் குச்சொழுங்கைகளில் எம் தோழர்கள் இன்றும் நடந்துகொண்டிருக்கிறார்கள்!

படிப்பகம்

www.padippakam.com





# சூரியக்கதிர் சுட்டெரித்துவிடுமா விடுதலை உணர்வை?

- திலீபன்

சிறிலங்கா ஆயுதப்படையினர் நடாத்திய "சூரியக்கதிர் - 1" இன் மூலமாய் அரசு எதிர்பார்த்த இலக்கினை அடைய முடியாமற் போயிற்று. குடா நாட்டில் வலிகாமப்பகுதியினை கைப்பற்றுவதற்கான மரபு ரீதியான போரில் விடுதலைப்புலிகளின் போரிடும் ஆற்றலை அழிப்பது மட்டுமன்றி கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் சிறிலங்கா அரச நிர்வாகக் கட்டமைப் பினை ஏற்படுத்துவதும் அந்நடவடிக்கையின் பிரதான நோக்கமாக இருந்தது. இருந்தும் அந்நடவடிக்கையால் விடுதலைப்புலிகளின் போரிடும் ஆற்றலை சிதைத்துவிட முடியவுமில்லை; மக்கள் வெளியேறிய மையினால் அரச நிர்வாகத்தினை அமைத்துவிட இயலவுமில்லை.

இதனால் அரசுக்கு இன்னொரு "சூரியக்கதிர்" தேவைப்பட்டது. இந்த "சூரியக்கதிர்" இனால் விடுதலைப்புலிகளின் போரிடும் ஆற்றலை அழித்துவிடமுடியுமென அரசு நம்புவதற்கு எந்தவித நியாயமுமிருக்க வில்லை. ஏனெனில் தமது போரிடும் ஆற்றலைத் தக்கவைப்பதற்கான தந்திரோபாயங்களை விடுதலைப்புலிகள் கொண்டுள்ளார்கள் என்பதனை அரசு நன்கு உணர்ந்திருந்தது. இருந்தும் இந்த இராணுவ நடவடிக்கை மூலமாக மக்களைக் கைப்பற்றி தமது இராணுவ வலையத் தினுள் கொண்டுவந்து அரச நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றினை யாழ். குடாநாட்டில் ஏற்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டது.

மீண்டும் ஒரு பெரிய மரபுரீதியான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கு மானால் அதனைத் தடுத்து முறியடித்துவிடமுடியுமென புலிகளும் நம்பியிருக்கவில்லை. மக்கள் வாழும் பகுதிக்குள் பாரிய மோதல்களை நடாத்துவதற்கும் புலிகள் விரும்பவில்லை. இராணுவத்திற்கும் புலி களுக்குமிடையிலான மோதலில் இடையில் சிக்குப்பட்டு மக்கள் கொல்லப்பட்டாலோ அல்லது அவ்வாறான ஒரு மோதலைச் சாட்டாக வைத்து தமிழ் மக்களை இராணுவம் கொன்றழித்தாலோ இழப்பு தமிழ் மக்களுக்குத் தான் என்பதை புலிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். மோதல்கள் ஆரம்பித்த பின்னர் பெருந்தொகையான மக்கள் கிளாலி

படிப்பகம்

www.padippakam.com



யினைக் கடந்து வெளியேறுவது சாத்தியமாக இருக்காது என்பதையும், இராணுவம் இத்தடவை "சூரியக்கதிர் - 1" இன் பட்டறிவின் அடிப் படையில் மக்கள் வெளியேறாமல் தடுப்பதற்கான அனைத்து முயற்சி களையும் எடுக்கும் என்பதையும் புலிகள் உள்வாங்கியிருந்தார்கள்.

இதனால் இராணுவம் அடுத்த இராணுவ நடவடிக்கையினை ஆரம்பித் தால் மக்கள் இராணுவத்தின் பிடியில் சிக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதை முன்னுணர்ந்துகொள்வது புலிகளுக்குச் சிரமமாக இருந்திருக் காது. இவ் அபாயத்தினைக் குறைத்துக்கொள்ள மக்களை வன்னிப் பெருநிலத்துக்கு நகருமாறும் புலிகள் வேண்டிக்கொண்டனர். இவ்வாறு நகருவதன்மூலம் இராணுவத் தாக்குதல்களிலிருந்து உயிர்களைப் பாதுகாத்துக்கொள்வதுடன் அரசுக்கு மீண்டும் ஒரு அரசியல் தோல்வி யினைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பும் இருந்தது.

புலிகளின் வேண்டுகோளை ஏற்று மக்கள் வெளியேறத் தொடங்கியிருந் தாலும் யுத்தம் ஆரம்பிக்கும் வரை மக்களின் வெளியேற்றம் பாரிய அளவில் இருக்கவில்லை. மக்கள் தமக்கு மிக அத்தியாவசியமான பொருட் களை மூட்டை முடிச்சுக்களாகக் கட்டிக்கொண்டு யுத்தம் ஆரம்பிக்கும் போது வெளியேறுவோமெனக் காத்திருந்தனர். சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் இந் நடத்தை இயல்பானதுதான். தாம் காலம் காலமாக வசித்த ஒரு இடத்தினை விட்டு யுத்தம் ஆரம்பிக்கும் முன்னரே வெளியேறுவதென்பது அவர்களைப் பொறுத்தவரை ஒரு இலகுவான விடயமல்ல. இது ஒரு இலகுவான முடிவுமல்ல. தாம் வாழ்நாள் முழுவதும் தேடிய தமது பொருள் பண்டங்களைக் கைவிட்டு, தாம் ஆசையுடன் வளர்த்த வளர்ப்புப்பிராணிகளை அநாதரவாக விட்டுவிட்டு வெளி யேறுவது என்ற முடிவு ஒரு கடினமான முடிவுதான். மேலும் வெளியேறிச் செல்லும் இடத்தில் தாம் வாழ்வதற்கான அடிப்படை வசதிகளைப் பெறுவதில் இருக்கக்கூடிய சிரமங்களையும் மக்கள் உணர்ந்திருந்தனர். இதனால் எவ்வளவு தாமதமாக வெளியேறலாமோ அவ்வளவு தாமதமாக வெளியேறுவதனை மக்கள் விரும்பியிருப்பர். இதனைவிட இராணுவ நடவடிக்கையினை நிறுத்தி புலிகளுடன் அரசியல் ரீதியான பேச்சு வார்த்தையினை ஆரம்பிக்குமாறு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடாத்திய போராட்டங்களுடன் மக்கள் தம்மை இணைத்துக்கொண்டனர். சாவகச்சேரி முதல் பருத்தித்துறைவரை 32 கி.மீ தூரத்திற்கு மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது கைகளைக் கோர்த்து மனிதச் சங்கிலிகளாக கால்கடுக்க நின்றனர். தம் மீதான இராணுவ நடவடிக் கையை நிறுத்துவிக்குமாறும் தமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கு மாறும் கோரி ஐந்து இலட்சம் கையெழுத்துக்களைத் திரட்டி ஐக்கிய

படிப்பகம்

www.padippakam.com




நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு வழங்கும் செயற்பாடுகளில் இறங்கினர். இச்செயற்பாடுகளினால் ஒரு இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்ள அரசு தயங்கலாம் என்ற நப்பாசையும் அவர்களின் அடிமனதில் குடிகொண்டிருந்திருக்கக்கூடும். இதனால் யுத்தம் ஆரம்பிக்கும்போது வெளியேறுவோம் என்ற நினைப்புடன் அவர்கள் காத்திருந்தனர்.

மக்களின் உணர்வுகளை அரசு பொருட்படுத்தவேயில்லை. என்று தான் சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தியிருக்கின்றன? 19.04.1996 அன்று "சூரியக்கதிர் - 2" எனும் குறியீட்டுப் பெயருடன் 20 000 படையினரைப் பயன்படுத்தி தனது ஆட்பிடிப்பு யுத்தத்தினை ஆரம்பித்தது அரசு.

மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நாலாபுறமுமிருந்து எறிகணைகள் வீசப்பட்டன. உலகின் பல்வேறு நாடுகளிலுமிருந்து வாங்கிய விமானங்கள் குண்டுகளை வீசித் தள்ளின. வீசும் குண்டுகளால் கொல்லப்படும் மக்களைப் பற்றிய எந்தவித அக்கறையுமே அற்று தனது இராணுவ நடவடிக்கையில் முனைப்புடன் இறங்கின சிங்களப் படைகள். புத்தூர்ப் பகுதியிலிருந்து புறப்பட்ட படையினரை மட்டுவில் பகுதியில் வைத்து புலிகள் தாக்கத்தொடங்கினர். மரபு ரீதியான போரில் தனக்குரிய சாதகத் தன்மையினைப் பயன்படுத் திக்கொண்டு முன்னேறத்தொடங்கியது இராணுவம். தென்மராட் சியின் சில பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டன. முன்னேறும் இராணுவத் திற்கெதிராக நகர்ப்புற கரந்தடி உத்திகளைப் பயன்படுத்துவதற்கு ஒப்பீட்டளவில் வாய்ப்புக்கள் குறைந்த தென்மராட்சியின் புவியியல் அமைப்பும், முன்னேறும் இராணுவத்திடம் சிக்கிக் கொண்ட மக்களுமாய் இணைந்து இராணுவத்துடனான நேரடி மோதலில் புலிகள் ஈடுபடுவதனைக் குறைத்தது. இது வலிகாமச் சமரினை விட சற்று வேகமாக இராணுவம் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை இராணுவத்திற்குக் கொடுத்தது.

*முன்னேறும் இராணுவத்திற்கெதிராக நகர்ப்புற கரந்தடி உத்திகளைப் பயன்படுத்துவதற்கு ஒப்பீட்டளவில் வாய்ப்புக்கள் குறைந்த தென்மராட்சியின் புவியியல் அமைப்பும், முன்னேறும் இராணுவத்திடம் சிக்கிக்கொண்ட மக்களுமாய் இணைந்து இராணுவத்துடனான நேரடி மோதலில் புலிகள் ஈடுபடுவதனைக் குறைத்தது. இது வலிகாமச் சமரினை விட சற்று வேகமாக இராணுவம் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை இராணுவத்திற்குக் கொடுத்தது.*

இராணுவம் தனது ஆக்கிரமிப்பைத் தொடங்கியவுடன் தயாராக இருந்த மக்கள் அனைவரும் கிளாலியை நோக்கி விரைந்தனர். ஒரு கடல் வழிப்

www.padippakam.com



பயணம் மூலமாக கிளாலியினைக் கடக்கவேண்டியிருந்தமையினால் அனைத்து மக்களையும் உடனடியாக வன்னிப்பெருநிலத்திற்கு அனுப்புவது சாத்தியமாக இருக்கவில்லை. இருந்த போதும் தம்மால் இயலக் கூடிய அளவுக்கு மக்கள் வெளியேறுவதற்கான சகல வசதிகளையும் புலிகள் செய்துகொடுத்தனர். மட்டுவில் ஊடாக கொடிகாமம், கச்சாய் நோக்கி நகர்ந்த இராணுவத்தினர் கிளாலியைக் கைப்பற்றுவதற்கு எடுத்த முயற்சியை சில நாட்கள் தடுத்து நிறுத்தினர். அந்தக் கால அவகாசத் தினுள் கணிசமான அளவு மக்கள் கிளாலியினைக் கடந்து வன்னிப் பெரு நிலத்தினைச் சென்றடைந்தனர். வடமராட்சிப்பகுதியைச் சேர்ந்த மக் களிலும் பலர் கிளாலியைக் கடந்து வன்னிமண்ணைச் சென்றடைந்தனர்.

கிளாலியினை இராணுவம் கைப்பற்றியவுடன் மக்கள் வெளியேறுவதற் கான வாய்ப்புக்கள் அருகிவிட்டன. மக்கள் வெளியேறாதவாறு மக்களை முற்றுகையிட்ட இராணுவம் வலிகாமப் பகுதியைச் சேர்ந்த மக்களை மீண்டும் வலிகாமத்தை நோக்கி அழைத்துச் செல்லும் செயற்பாட்டைத் தொடங்கியது. இச் செயற்பாட்டை ஆரம்பிக்கும் போது புலிகள் எவராவது மக்களோடு மக்களாகக் கலந்திருப்பார்களா என்ற சந்தேகத்தினை எழுப்பி, மக்களை இனம்பிரிக்கத் தொடங்கியது. வயோதிபர்கள், இளைய வர்கள் என்ற வகையிலும் ஆண்கள், பெண்கள் என்ற வகையிலும் வயது, பால் அடிப்படையில் மக்களை இனம்பிரித்த படையினர் அவர்களை முகாம்களில் அடைத்தனர். இளைஞர்களில் சந்தேகத்திற்கிடமானவர்கள் சித்திர வதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். பிந்திக் கிடைத்த செய்திகளின் படி 60பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

வலிகாமப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களும் சிறப்பு முகாம் களில் அடைத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் மிகக் குறைந்த எண்ணிக்கை யுடையோரே வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. சில இடங்களில் இரவு நேரங்களில் வீடுகளுக்குள் அத்துமீறி நுழையும் இராணுவத்தினர் சில பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகவும் சொல்லப் படுகிறது. எனினும் வலிகாமத்திலிருந்து வரும் தகவல்கள் இராணுவத்தின் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதனால் முழுமையான விபரங்கள் கிடைக்கப்பெற வில்லை.

இக் கட்டுரையினை எழுதிக்கொண்டிருக்கும் வரையில் தென் மராட்சியின் முக்கிய பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டிருக்கின்றது. தென் மராட்சி முழுவதும் இராணுவத்தின் பிடியில் இன்னமும் சிக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com


வடமராட்சிக்கும் இராணுவம் இது வரையில் செல்லவில்லை. இருப்பினும் தென்மராட்சியின் ஏனைய பகுதிகளை நோக்கியும் வடமராட்சி நோக்கியும் இராணுவம் தனது நகர்வினை மேற்கொள்வதற்கான முயற்சி களில் இறங்குவதற்கான நிலைமைகள் உள்ளன.



இத்தகைய ஒரு சூழலில் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்ற கேள்விகள் மக்கள் மனதில் எழும்புவது இயல்பானதே. விடுதலைப்புலிகளின் தலைமையில் தமிழ் மக்களுடைய அரசு கட்டப்பட்டு தமிழீழ நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டுவந்த ஒரு தேசத்தில் நிகழ்ந்த இராணுவ ஆக்கிரமிப்பு என்ற வகையில் யாழ். குடாநாட்டின் மீதான ஆக்கிரமிப்பு மக்கள் மனதில் சில தாக்கங்களை ஏற்படுத்தவே செய்யும். விடுதலைப் போராட்டம் சில ஆண்டுகள் பின்தங்கிப் போய் விட்டது போன்ற உணர்வுகள் கூட ஏற்படலாம். தமிழர்களுடைய கொடி பறந்த தேசத்தில் சிங்களக் கொடி பறப்பது மட்டுமன்றி சிங்கள அரசின் நிர்வாகத்தினை தமிழ் மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளுகின்றார்கள் என்ற அரசின் பிரச்சாரம் கவலையினையும் கோபத்தினையும் ஏற்படுத்தவே செய்யும். யாழ். குடாநாட்டை மீட்பது எப்போது? மீண்டும் அம்மண் ணிலே தமிழர்களுடைய கொடி பட்டொளிவீசிப் பறப்பது எப்போது? என்ற ஏக்கங்கள் மனதிற்பிறக்கவே செய்யும்.

---

**தமிழர்களுடைய கொடி பறந்த தேசத்தில் சிங்களக் கொடி பறப்பது மட்டுமன்றி சிங்கள அரசின் நிர்வாகத்தினை தமிழ் மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளு கின்றார்கள் என்ற அரசின் பிரச்சாரம் கவலையினையும் கோபத்தினையும் ஏற்படுத்தவே செய்யும். யாழ். குடாநாட்டை மீட்பது எப்போது? மீண்டும் அம்மண்ணிலே தமிழர்களுடைய கொடி பட்டொளிவீசிப் பறப்பது எப்போது? என்ற ஏக்கங்கள் மனதிற் பிறக்கவே செய்யும்.**

---

இவ்வாறான ஒரு சூழலில் இன்றைய அரசியல் இராணுவ நிலைமைகள் தொடர்பான ஒரு ஆழமான பார்வை எமக்கிருப்பது அவசியம். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மேலாதிக்கத்தினை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு வாழவேண்டும் எனும் சிங்கள பௌத்த இனவாதிகளின் நிலைப்பாடே இன்றைய இராணுவ நடவடிக்கைகளுக்கு அடிப்படைக் காரணம் என்பதனை நாம் மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும். இலங்கைத் தீவில் சிங்கள மக்களைப் போல தமிழ் மக்களும் சமத்துவமான அதிகாரங்களைக் கொண்ட ஒரு மக்கள் கூட்டமாக இருப்பதனை சிங்கள, பௌத்த பேரினவாதம் அனுமதிக்காத காரணத்தினால்தான் நாம் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதனை நாம் என்றுமே மறந்து விடமுடியாது. வரலாற்றுரீதியாக எம்மீது சுமத்தப்பட்ட ஒடுக்கு

www.padippakam.com



முறைகளே, அந்த ஒடுக்குமுறைகளை அகிம்சை ரீதியில் முறியடிக்க முடியாமல் போன வரலாற்று வளர்ச்சிப்போக்கே ஒரு ஆயுதம் தாங்கிய விடுதலைப் போருக்கு தமிழ் மக்களைத் தள்ளியது என்பதையும் நாம் என்றுமே நினைவிலிருந்து அகற்றிவிடமுடியாது. சமாதானமான முறையில் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்விகளைத் தழுவிய பின்னரே எமது தேசம் எழுச்சிகொண்டு விடுதலைப்போரில் குதித்தது என்பதையும் வரலாறு என்றுமே நினைவிலே கொண்டிருக்கும் .எந்த அடிப்படை உரிமைகளுக்காக நாம் போராடினோமோ அந்த அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட போது எமக்கென்ற ஒரு தனி அரசே எமது உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் என்பதே வரலாறு எமக்குக் கூறும் செய்தி.

அகிம்சை ரீதியான போராட்டங்கள் நடந்தபோதெல்லாம் அதனை அரசு ஆயுதரீதியிலேதான் நசுக்கியது. எனவே ஆயுதப்போராட்டம் ஒன்றை ஆயுத ரீதியிலே நசுக்குவதற்கு அரசு தன்னாலான அனைத்துமுயற்சிகளையும் எடுக்கும் என்பதும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். ஆனால் அரசினால் முறியடிக்கப்படமுடியாத அளவுக்கு ஒரு வளர்ச்சிகண்ட போராட்டமாக தமிழீழ விடுதலைப் போராட்டம் நிலைபெறத் தொடங்கியது. இந்திய இராணுவத்தினால் நசுக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளையும் அரசியல், இராணுவ, இராஜதந்திர ரீதியில் எதிர்கொண்டு போராட்டம் அடுத்த கட்டத்தினை நோக்கி நகர்ந்தது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒரு தனி அரசுக்கான ஆரம்பக்கட்டுமானங்களை அமைத்துக்கொண்டது.

இந்தவகையிலேதான் யாழ். குடாநாட்டிலும் தமிழீழ அரசுக்கான ஆரம்பக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டன. அவ்வாறு அமையப் பெற்ற கட்டுமானங்கள் தமிழ் மக்களுக்கு தனியரசு சாத்தியமான ஒன்றுதான் என்ற ஒரு நம்பிக்கையினை வழங்குகின்றது என்பதனை உணர்ந்துகொண்ட சந்திரிகா அரசு தமிழீழம் என்பது சாத்தியமற்ற ஒன்று என்ற உளவியல் உணர்வினை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு முடிவெடுத்தது. அவ்வாறான உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தவேண்டுமானால் யாழ். குடாநாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் அரசக் கட்டுமானங்களை உடைத்தெறியவேண்டும். அதற்கு ஒரு பாரிய படைநகர்வை மேற்கொள்ள வேண்டும். அப் பாரிய படைநகர்வின் ஊடாக தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை திணிக்கவேண்டும். "சூரியக்கதிரினை" வீசி மக்களுக்குப் பிரகாசத்தினை வழங்குவதே இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்று கூறிக்கொண்டாலும் அந்த சூரியக்கதிரின் மூலம் தமிழ் மக்களின் விடுதலை உணர்வைச் சுட்டெரிக்கவேண்டும் என்பதே

www.padippakam.com




அரசின் உண்மையான இலக்காக இருந்தது. சிங்கள பௌத்த பேரினவாதம் தனது மேலாண்மையை நிலைநிறுத்தியவாறு முன்வைக்கும் ஒரு தீர்வினை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வதற்கான ஒரு நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்துவதே இவ் இராணுவ நடவடிக்கையின் அரசியல் இலக்காக இருந்தது.

சிறிலங்கா அரசினைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகள் எனும் தமிழ் மக்களின் முன்னணிப்படை, தனது மேலாண்மையினைத் தமிழ் மக்கள்மீது திணிப்பதற்கு ஒரு தடையாக இருப்பதனை உணர்ந்து கொண்டது. இதனால் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் பல மிழக்கச்செய்து அதனூடாக தனது மேலாதிக்கத்தினை நிலைநிறுத்த முடிவெடுத்துக்கொண்டது. ஆனால் இக் கட்டுரையின் ஆரம்பத்திற் குறிப்பிட்டவாறு விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் தனது முயற்சியில் அரசால் வெற்றிபெறமுடியவில்லை. இருப்பினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம் ஒன்றை தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவரமுடிந்திருக்கிறது. அப்பகுதியில் வாழ்ந்த ஒரு பகுதி மக்களையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடிந்திருக் கிறது. இவ்வாறு தனது கட்டுப்பாட்டின்கீழ் வந்த பிரதேசத்தினையும் மக்களையும் வைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை பலவீனப் படுத்தி தான் அடைந்துகொள்ளவிரும்பும் மேலாதிக்கத்தினை நிலை நிறுத்த அரசு முயலலாம்.

**"சூரியக்கதிரினை" வீசி மக்களுக்குப் பிரகாசத்தினை வழங்குவதே இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்று கூறிக்கொண்டாலும் அந்த சூரியக்கதிரின் மூலம் தமிழ் மக்களின் விடுதலை உணர்வைச் சுட்டெரிக்கவேண்டும் என்பதே அரசின் உண்மையான இலக்காக இருந்தது. சிங்கள பௌத்த பேரினவாதம் தனது மேலாண்மையை நிலைநிறுத்தியவாறு முன்வைக்கும் ஒரு தீர்வினை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வதற்கான ஒரு நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்துவதே இவ் இராணுவநடவடிக்கையின் அரசியல் இலக்காக இருந்தது.**

அவ்வாறு முயல்வதற்கு அரசு பல்வேறு தந்திரோபாயத்தினை மேற் கொள்ளலாம். இந்தத் தந்திரோபாயங்களுக்கான மூலோ பாயத்தினை ஒரு வரியில் சொல்வதானால் "மக்களின் மனங்களை வெல்லல்" எனும் பதத்தினால் குறிப்பிடலாம். இவ்வாறு மக்களின் மனங்களை வெற்றி கொள்ளுதல் என்பது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மேலாண் மையைக் கொண்ட ஒரு தீர்வினை ஏற்றுக் கொள்ளும் ஒரு "மனப் பக்குவத்தினை" தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதனையே குறித்து நிற்கும். எந்த மக்களுக்கு அவர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடு

படிப்பகம்

www.padippakam.com



கிறார்கள் என்ற காரணத்தினால் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டதோ அதே மக்களில் ஒரு பகுதியினர் இராணுவத்தின் பிடியில் சிக்கிய பின்னர் அவர்களுக்கு அவ்வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் "மக்களின் மனங்களை வெல்லும்" நடைமுறையில் ஓர் அம்சமாக அமையும். மின்சாரம் இழந்த யாழ். வீதிகள் மின் இணைப்பைப் பெறலாம். மருந்துகள் மறுக்கப்பட்ட மருத்துவமனைகள் அனைத்து வசதிகளையும் பெறலாம். அனுமதி மறுக்கப்பட்ட எரிபொருட்கள் பகல் இரவாய் விற்பனைக்கு விடப்படலாம். தடைவிதிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் தாராளமாய்க் கிடைக்கலாம். இவையெல்லாம் தமிழ் மக்களின் விடுதலை உணர்வினை மழுங்கடித்துவிடுவதற்கு சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு செய்யப்படலாம்.

***மக்களின் மனங்களை வெற்றிகொள்ளுதல் என்பது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மேலாண்மையைக் கொண்ட ஒரு தீர்வினை ஏற்றுக்கொள்ளும் ஒரு "மனப்பக்குவத்தினை" தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதனையே குறித்துநிற்கும்.***

அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த மக்கள் இராணுவத்தின் பிடியில் சிக்கிக்கொண்டபின்னர் வழங்கப்படும் இவ்வசதிகளின் நோக்கத்தினை தெளிவாக உணர்ந்துகொள்வதற்கு ஒரு அரசியல் தேவைப்படும். தம்மை நிரந்தர அடிமைகளாக மாற்றுவதற்கு அரசு தீட்டியுள்ள திட்டத்தின் ஓர் அங்கம் தான் இவை என்பதனைப் புரிந்து கொள்வது எமது மக்களுக்கு கடினமான விடயமேயல்ல. ஏனெனில் எமது வரலாறு எம்முன்னால் ஒரு வழிகாட்டியாக உள்ளது. நாம் போராட ஆரம்பித்தது மின்சார இணைப்பு இல்லை என்பதற்காகவோ, மருத்துவமனைகளில் மருந்துகள் கிடைக்கவில்லை என்பதற்காகவோ, எரிபொருட்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதற்காகவோ, உணவுப் பொருட்கள் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்காகவோ அல்ல. இதனால் தற்போது ஏற்படுத்தித்தரப்படும் வசதிகள் போராட்டத்தின் அடிப்படைக் காரணங்களை நிவர்த்திசெய்யும் தன்மையைக் கொண்டவை அல்ல என்பதனை மக்கள் இலகுவாகவே புரிந்து கொள்ளமுடியும். இருப்பினும் இராணுவத்தின் பிடியில் இருக்கும் வரை கிடைக்கும் வசதிகளை மக்கள் பெற்றுக்கொள்ளவே செய்வர். இதன் அர்த்தம் இராணுவத்தின் நிர்வாகத்தினை அல்லது சிறிலங்கா அரசின் ஆதிக்கத்தினை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதாக இருக்க முடியாது.

இதைவிட அரசின் அரசியல் இலக்கு "மக்களின் மனங்களை வெல்லல்" என்பதனைச் சுற்றியதாக இருந்தாலும் இங்கு இராணுவத்தின்

படிப்பகம்

www.padippakam.com




நலனுக்கும் அரசின் இலக்கிற்கும் இடையே ஒரு முரண்பாடு ஏற்படவே செய்யும். பொதுவாக அந்நிய பின்னணியைக் கொண்ட, தமிழ் மக்களுக் கெதிரான கொடூரமான இனப்படுகொலைகளைப் புரிந்த வரலாற்றினைக் கொண்ட ஒரு தனிச் சிங்கள இராணுவம் குறித்த பயப்பீதி மக்களுக்கு இருக்கவே செய்யும். இராணுவத்திற்கும் தம்மைக் கொல்வதற்காக மக்களோடு மக்களாக புலிகள் கலந்திருக்கின்றார்கள் என்ற பயப்பீதி இருக்கவே செய்யும். இதனால் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக என்று கூறி, மக்கள் மத்தியிலிருந்து தமக்கு எதிரான எதிர்ப்புகள் தோன்றாவண்ணம் முன்னேற்பாடுகளை இராணுவம் செய்ய முனையும். இளைய வயதுடையவர்கள் எவரும் சந்தேகக் கண்ணுடன் நோக்கப் படுவர். அடிக்கடி சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் இடம்பெறும். இவ்வாறான இராணுவச் செயற்பாடுகள் மக்களுக்கு ஏற்கனவேயுள்ள பயப்பீதியை அதிகரிக்க "மக்களின் மனங்களை வெல்லல்" எனும் அர சியல் இலக்கு தோல்வியினைத் தழுவும். இதனால் தான் உலக வரலாறு அந்நிய இராணுவம் எவற்றாலும் உள்நாட்டு மக்களின் மனங்களை வென்றதான பதிவு எதனையும் கொண்டதாக இல்லாதிருக்கிறது. இந்த உலக யதார்த்தத்திற்கு சிறிலங்கா இராணுவமும் உட்படுவது தவிர்க்க முடியாது.

***மின்சாரம் இழந்த யாழ். வீதிகள் மின் இணைப்பைப் பெறலாம். மருந்துகள் மறுக்கப்பட்ட மருத்துவமனைகள் அனைத்து வசதிகளையும் பெறலாம். அனுமதி மறுக்கப்பட்ட எரிபொருட்கள் பகல் இரவாய் விற்பனைக்கு விடப்படலாம். தடைவிதிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் தாராளமாய்க் கிடைக்கலாம். இவையெல்லாம் தமிழ் மக்களின் விடுதலை உணர்வினை மழுங்கடித்துவிடுவதற்கு சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு செய்யப்படலாம்.***

எனவே "மக்களின் மனங்களை வென்று" இனப்பிரச்சனையினைத் தீர்வுக்குக் கொண்டுவருதல் என்பது சாத்தியமே அல்ல. இருப்பினும் தமிழர்களைக் கொண்டு ஒரு அரைகுறை நிர்வாக முறையினை ஏற்படுத்த அரசு சில நடவடிக்கைகளை எடுக்கலாம். அவ்வாறு அரசுக்குத் துணை நிற்க கொழும்புக்குழுக்கள் தயாராகவே இருக்கும். ஆனால் இந்தக் கொழும்புக்குழுக்கள் குறித்த மக்களின் பயவுணர்வு இராணுவத்தின் நிலைக்கு பெரிதும் மாறுபட்டதல்ல. இந்திய இராணுவ காலகட்டத்து அனுபவங்களும் இலகுவில் மறக்கக்கூடிய ஒன்றல்ல. இதனால் அம்முயற் சியும் தோல்வியினையே தழுவும்.

இதற்கிடையில் சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகள் நடாத்துகின்ற பல முனைப் பதில்டிகளை எதிர்கொண்டாகவேண்டிவரும். இராணுவம்

படிப்பகம்

www.padippakam.com



ஆக்கிரமித்த பகுதிகள் உட்பட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும், தென்னிலங்கையிலும் இத்தாக்குதல்கள் நடாத்தப் படலாம். குடாநாட்டில் இருந்த இராணுவமுகாம்களை சுற்றி காவலரண் அமைத்து இரவு பகலாகக் காத்திருந்த ஆயிரக்கணக்கான போராளிகள் இன்று பல்வேறு தாக்குதல் குழுக்களாக மாறியிருப்பர். சூரியக்கதிர் நடவடிக்கைக்குப் பின்னர் புதிதாகப் புலிகளுடன் இணைந்திருக்கும் போராளிகளும் தாக்குதல் களத்தில் பங்குபற்றும் திறனைப் பெற்றுவருவர். இது புலிகளின் தாக்குதற்சக்தியை முன்னைவிட அதிகரிக்கும். இதனால் குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இராணுவச் சமநிலையில் புலிகளுக்குச் சாதகமான மாற்றம் நிகழும். குடாநாட்டை ஆக்கிரமிப்பதற்காக ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஏனைய பகுதிகளிலிருந்து குடாநாட்டிற்கு நகர்த்தப்பட்டிருக்கும் ஒரு சூழலில் பல்வேறு பகுதிகளிலும் புலிகள் தமது தாக்குதல்களை விஸ்தரித்துச் செல்லும்போது எல்லா முனைகளிலும் படையினரைப் பகிர்ந்து கொடுக்கவேண்டிய நிலை இராணுவத்திற்கு ஏற்படலாம். அப்போது இராணுவத்தின் நிலை சிக்கலானதாக மாறும். இராணுவ வளங்களைப் பல்வேறு பகுதிகளிலும் பகிராவிடின் குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகள் படிப்படியாகப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வருவதனைத் தவிர்க்க முடியாது போய்விடும். அவ்வாறு கட்டுப்பாட்டுப் பகுதிகள் அதிகரிக்கும்போது அதன் தாக்கம் குடாநாட்டுத் தாக்குதல்களிலும் பிரதிபலிக்கும். வளங்களைப் பகிர முற்படின் எல்லா இடங்களிலும் இராணுவம் பெரும் இழப்புக்களைச் சந்திக்கநேரிடும். இது இந்தச் சூரியக்கதிர் தோற்றியுள்ள ஒரு இராணுவ யதார்த்தமாகும். இந்த இராணுவ யதார்த்தம் தான் போரின் போக்கினைத் தீர்மானிக்கப் போகின்ற காரணியாகவும் அமையும்.

**நாம் போராட ஆரம்பித்தது மின்சார இணைப்பு இல்லை என்பதற்காகவோ, மருத்துவமனைகளில் மருந்துகள் கிடைக்கவில்லை என்பதற்காகவோ, எரிபொருட்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதற்காகவோ, உணவுப் பொருட்கள் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்காகவோ அல்ல.**

மேலும் இந்த இராணுவ யதார்த்தம் ஒரு விடயத்தினைத் தெளிவாக எடுத்துரைக்கும். அதாவது தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தினை இராணுவமுனையில் நசுக்கிவிடமுடியாது என்பதே அது. அப்படியானால் அடுத்த கட்டம் என்ன?

அடுத்த கட்டத்தினை நோக்கும் முன்னர் நாம் இன்னொரு விடயத்தினை கவனத்திற்கொள்ளவேண்டும். விடுதலைப்புலிகளை இராணுவரீதியில் செயலிழக்கவைக்கமுடியாது என்பதை சிறிலங்கா அரசும் உணர்ந்தே

படிப்பகம்

www.padippakam.com



உள்ளது என்பதுதான் அவ்விடயம். இதனால் நீண்ட காலத்தில் தான் எதிர்கொள்ளக்கூடிய நெருக்கடிகளையும் அரசு உணர்ந்தேதான் இருக்கும். இதனைத் தவிர்த்துக்கொள்ள அரசு இரு முயற்சிகளில் இறங்கலாம்.



1. புலிகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்ற எண்ணத் தினைத் தோற்றுவித்து தான் மேலாதிக்கம் செலுத்தக்கூடிய முறையில் புலிகளுடனான ஒரு பேச்சுவார்த்தையினை நடத்தல்.

2. புலிகளுக்கெதிரான பேராட்டத்திற்கு அனைத்துலகத்தின் ஆதரவையும் தன்வசப்படுத்தி புலிகளைத் தனிமைப்படுத்தி பலவீனப் படுத்துவதனூடாக தாழ்நிலை யுத்தத்தினை (low intensive warfare) நடாத்தக்கூடிய ஒரு குழுவாக மாற்றல்: உதாரணமாக இந்தியாவில் நக்ஸலைட்டுக்கள் எழுச்சிமிகு போராட்டத்தினை ஒரு காலத்தில் நடாத்தியிருந்தார்கள். இன்று அவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிளவுபட்டு குறைந்த அழுத்தத்தினைத் தரக் கூடியதான சிறு சிறு தாக்குதல்களையே செய்யக்கூடிய குழுக்களாக்கப்பட்டுள்ளார்கள். இத்தகைய ஒரு நிலையினை ஏற்படுத்த அரசு முயலலாம்.

சிறிலங்கா அரசின் இவ்விரண்டு முயற்சிகளும் முறியடிக்கப்படும் போது தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப் பதற்கான சூழ்நிலை உருவாகும். அதாவது தமிழ் மக்கள் மீதான ஒரு அரைகுறைத் தீர்வினைத் திணிக்கமுடியாத வகையிலும் அதேநேரம் அனைத்துலகமும் இணைந்து எமது போராட்டத்தை நசுக்காத வகையிலும் எமது செயற் பாடுகள் அமையும்போது எமது இலக்கில் நாம் வெற்றிபெறுவது நிச் சயமாகும். அதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.

---

**குடாநாட்டை ஆக்கிரமிப்பதற்காக ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஏனைய பகுதிகளிலிருந்து குடா நாட்டிற்கு நகர்த்தப்பட்டிருக்கும் ஒரு சூழலில் பல்வேறு பகுதிகளிலும் புலிகள் தமது தாக்குதல்களை விஸ்தரித்துச் செல்லும்போது எல்லாமுனைகளிலும் படையினரைப் பகிர்ந்து கொடுக்க வேண்டிய நிலை இராணுவத்திற்கு ஏற்படலாம். அப்போது இராணுவத்தின் நிலை சிக்கலானதாக மாறும். இராணுவ வளங்களைப் பல்வேறு பகுதிகளிலும் பகிராவிடின் குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகள் படிப்படியாகப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வருவதனைத் தவிர்க்க முடியாது போய்விடும். அவ்வாறு கட்டுப் பாட்டுப் பகுதிகள் அதிகரிக்கும்போது அதன் தாக்கம் குடாநாட்டுத் தாக்குதல்களிலும் பிரதிபலிக்கும். வளங்களைப் பகிர முற்படின் எல்லா இடங் களிலும் இராணுவம் பெரும் இழப்புக்களைச் சந்திக்கநேரிடும். இது இந்தச் சூரியக்கதிர் தோற்றியுள்ள இராணுவ யதார்த்தமாகும். இவ்விராணுவ யதார்த் தமே போரின் போக்கைத் தீர்மானிக்கப்போகின்ற காரணியாகவும் அமையும்.**

படிப்பகம்

www.padippakam.com



இங்கு எமது வெற்றிவாய்ப்பினை நோக்கி நாம் செல்வதற்கு இரண்டு விடயங்கள் பிரதானமாகின்றன.

1. சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் தமிழர் படைபலம் சிதைவடையாது மேலும் பெருக்கப்படுதல்.

2. தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கான சர்வதேச ஆதரவு கட்டியெழுப்பப்படல்.

---

**தமிழ் மக்கள் மீதான ஒரு அரைகுறைத் தீர்வினைத் திணிக்கமுடியாத வகை யிலும் அதேநேரம் அனைத்துலகமும் இணைந்து எமது போராட்டத்தை நசுக்காத வகையிலும் எமது செயற்பாடுகள் அமையும் போது எமது இலக்கில் நாம் வெற்றிபெறுவது நிச்சயமாகும். அதற் கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.**

---

தமிழருடைய படைபலம் அதிகரித்தல் என்பது, படையின் ஆட்பலம், ஆயுதபலம் படைக்கலச் சக்தி என்பன அதிகரித்தலில் தங்கியுள்ளது. எந்தப் படைபலத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை திணித்துவிடுவதற்கு பேரினவாதம் முயல்கின்றதோ அதே முறையில் நாமும் எமது படைபலத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. தமிழர் தரப்பு தனது படைபலத்தை அதிகரிப்பதற்கான முயற்சியில் மக்களுடைய இணைவு முக்கியம் பெறுகின்றது. தமிழீழத் தாயகத்தில் வாழும் மக்களில் படைபலத்திற்குத் தேவையான ஆட்பலம் திரட்டப்படும் அதேவேளை ஆயுதபல படைக்கலச்சக்திக்கு தேவையான நிதிப் பலத்தை வெளிநாடு களிலே வாழுகின்ற தமிழ் மக்கள் இன்னும் கூடுதலாக வழங்கவேண்டி வரும்.

தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான ஆதரவை வென்றெடுத்தல் தொடர்ச்சியான நீண்டகாலச் செயற்பாடுகளினூடாக அடையப்பட வேண்டியது. சந்திரிகா அரசு தற்போது முன்வைத்துள்ள ஒரு அரை குறைத் தீர்வுத்திட்ட சட்டவரைவானது சிங்கள பௌத்த பேரினவாதத் தினால் முறியடிக்கப்படும் என்பதே வரலாற்று நிகழ்வாக இருக்கும். அத் தகைய ஒரு சூழலில் அரசியல் ரீதியாகத் தீர்க்கவேண்டிய தமிழர்களுடைய பிரச்சனைக்கு எத்தகைய தீர்வுமே வைக்கமுடியாநிலைக்கு சிங்கள அரசு தள்ளப்படும். அத்தகைய ஒரு சூழலில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச ஆதரவுத்தளம் விரிவுபடும். ஆனால் இதற்கு தமிழ் மக்கள் சர்வதேச சமூகமத்தியில் தீவிரமாகச் செயற்படவேண்டியிருக்கும்.

ஒட்டுமொத்தமாக நோக்கின் சிறிலங்கா அரசின் தற்போதைய சூரியக்கதிர் நடவடிக்கையால் தமிழீழ விடுதலைப்போராட்டத்தினை முறியடித்துவிட

படிப்பகம்

www.padippakam.com




முடியாது எனபதனையும். தமிழீழம் உருவாகுவதற்கான வரலாற்றுப் போக்கினை மாற்றியமைத்துவிட முடியாது என்பதனையும் நாம் புரிந்து கொள்வது கடினமான விடயமல்ல. தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அனைத்துலகம் அங்கீகரிக்கும் ஒரு சூழலில் தமிழ் மக்கள் விரும்பின் தனியரசு ஒன்றினை அமைத்துக்கொள்ளலும் சாத்தியமாகாத விடயமல்ல. இதற்கு சிங்கள பேரினவாதம் முன்வைக்கும் அரைகுறைத் தீர்வு முறியடிக்கப்படவேண்டும். இராணுவ ரீதியில் தமிழர் படைபலத்தை நசுக்கும் முயற்சி முறியடிக்கப்படவேண்டும். சர்வதேச சட்டங்களின் அடிப்படையிலான சுயநிர்ணய உரிமைக்கு தமிழ் மக்கள் உரித்துடையவர்கள் என்பது அனைத்துலகரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இவற்றை அடைந்துகொள்வதற்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் எவ்வளவோ உள்ளன. "சூரியக்கதிர்", **தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் போராட்டத்திற்கான அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் பெருக வேண்டும் என்ற செய்தியினைத் தான் சொல்கின்றது. நாம் அனைவரும் இணைந்த வகையில் இந்த அர்ப்பணிப்பினையும் கடின உழைப்பினையும் போராட்டத்திற்காக வழங்குவோமாக இருந்தால் எமது வெற்றியினை யாரால் தான் தடுத்துவிடமுடியும்?**

❑

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இந்நூலில் இரு கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. 1996 பங்குனிமாதம் 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையில் தி. இனியவன் எழுதி வெளியாகிய 'யாழ்ப்பாணப்படையெடுப்பு: தமிழ் மக்களுக்கான ஒரு செயன்முறைப்பாடம்' எனும் கட்டுரையும், திலீபன் எழுதிய 'சூரியக்கதிர் சுட்டெரித்துவிடுமா விடுதலை உணர்வை?' எனும் பதிக்கப்படாத கட்டுரையும் இந்நூலில் இடம்பெறுகின்றன. முதலாவது கட்டுரையில் வலிகாமச்சமர் பற்றிய ஒரு முழுமையான பரிமாணத்தினை வாசகர்கள் பெற்றுக்கொள்ள முடியும். தமிழர் படையணியின் போராளிகள் வலிகாமச்சமரை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதனை அறிந்து கொள்ள முடியும். "வலிகாமத்தினைக் காப்பாற்ற தமிழர் படையணியால் முடியாமல் போனது ஏன்" என்ற கேள்விக்கு தெளிவான விடையினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இரண்டாவது கட்டுரை சூரியக்கதிர் இராணுவநடவடிக்கைகளுக்கு பின்னதான நிலைமைகளை விபரிக்கின்றது. தமிழீழ விடுதலைப்போரில் தமிழர் தேசம் வெற்றிபெறக் கூடிய சாத்தியங்களையும் அதற்காக மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துரைக்கின்றது. இன்றைய அரசியல், இராணுவ நிலைமைகளை அலசுபவர்கள் அனைவரும் இந்நூலைப் படிப்பதன் ஊடாகத் தமது பார்வைகளை விரிவாக்கிக் கொள்ளமுடியும்; விவாதங்களைக் கூர்மைப்படுத்திக்கொள்ள முடியும்.

படிப்பகம்